Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 26, 2021

திங்கட்கிழமை ஜூலை 26, 2021 | ஒளி: 07 கதிர்: 57 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## திரிபு ஆதிக்கம் செலுத்தும்

கொரோனா வைரஸின் மாறிலிகளின் பிறழ்வுகளில் ஒன்றான டெல்டா என்றழைக்கப்படும் இந்தியாவின் மாறிலி, எதிர்வரும் மாதங்களுக்குள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் திரிபாக இருக்குமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கருத்துரைத்துள்ள விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் லக்குமார் பெர்னாண்டோ,

தொடர்ச்சி 2

### உலக சுகாதார ஸ்தாபனம்

# டெல்டா எச்சரிக்கை

தற்போது பரவியிருக்கும் டெல்டா வைரஸ் தொடர்பில், கடுமையான எச்சரிக்கையை விடுத்திருக்கும் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) உலகளாவிய ரீதியில் எதிர்வரும் வாரங்களில் 200 மில்லியனுக்கும் மேற்பட்டோர் டெல்டா கொரோனா வைரஸ் பிறழ்வுடன் அடையாளம் காணப்படலாம் என எதிர்வு கூறியுள்ளது.

உலகளாவிய ரீதியில் இதுவரை 124 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் டெல்டா பிறழ்வு பரவியுள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் காலத்தில் டெல்டா கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் பிரதான வைரஸாக மாறும் என எச்சரித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம்,

தொடர்ச்சி 2



## தொண்டமான்களின் வழியிலேயே இ.தொ.கா நிமிர்ந்து பயணிக்கும்'

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 82ஆவது ஆண்டு விழா, கொழும்பு, பழைய பாராளுமன்ற வளாகத்திலுள்ள ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தலுடன் நேற்று (25) நடைபெற்றது.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல், தொழிற்சங்க,

தொடர்ச்சி 2





### 21/4 தாக்குதல்:

## 'சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு'



2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களுக்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

"பிரதான சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதற்கான பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது" என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி 2

## 'கிங் மேக்கர்' கிளியின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்

### பிரதமர் உட்பட பலரும் இரங்கல்

'இலங்கையின் வர்த்தகப்புலி', 'கிங் மேக்கர் கிளி' என்றெல்லாம் அழைக்கப்பட்ட சிரச, சக்தி ஊடக வலையமைப்பின் தலைமை நிறுவனமான கெப்பிட்டல் மஹாராஜா குழுமத்தின் தலைவர் ஆர். ராஜமஹேந்திரன், நேற்று (25) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 79 ஆகும்.

தொடர்ச்சி 2



## 'ரிஷாட்டை நீக்குக'



ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாயின் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை தற்காலிகமாகவாவது அக்கூட்டணியிலிருந்து நீக்க வேண்டுமெனத் தெரிவித்த சிறுபயிர் செய்கை அபிவிருத்தி மற்றும் அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சானக வகும்பர, 16 வயது சிறுமியை வீட்டு வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதமானது என்பதை பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அறியவில்லையா எனக் கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில், அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி 2

## ரிஷாட்டின் வீட்டில் 'வன்புணர்வுக் கொத்தணி'

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்களாக அமர்த்தப்பட்டிருந்த சிறுமிகளும் யுவதிகளும் பல்வேறான பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்களில் பலர் கடுமையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன. ஆகையால், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் ஐந்து நியமிக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் முழுமையான கண்காணிப்பின் கீழ், இந்தப் பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொள்ளும். ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்களாகக் கடமையாற்றிய சிறுமிகள், பெண்கள் 11 பேர் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், ஜூலை 16ஆம் திகதியன்று உயிரிழந்த டயகம பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதான சிறுமியின் மரணம்

தொடர்ச்சி 2

### வாகன இலக்கத் தகடுகளால்

## தபால் வருவாயை அதிகரிக்கத் திட்டம்



தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக, புதிய வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, வாகனங்களுக்கான இலக்கத் தகடுகளை, தபால்மூலம் விநியோகிக்க தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தபால் சேவையின் வருடாந்த வருமானம் 9 பில்லியன்கள் மாத்திரமே கிடைப்பதாகவும் ஆனால், 14 பில்லியன் ரூபாய் செலவு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், 5 பில்லியன் ரூபாயை திறைசேரிக்குச் செலுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே, தபால் சேவையின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாகவே வாகனத் தகடுகளை தபால்மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகள்

## 6 மாதங்களுக்குள் 4,740 முறைப்பாடுகள்

சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் கடந்த 06 மாதங்களுக்குள் 4,740 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர்களை ஈடுபடுத்த முடியாத, பாதுகாப்பற்ற தொழில்களின் எண்ணிக்கையை 76 ஆக அதிகரித்துள்ளது என்றும் அச்சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 2

## சிறுவர்களுக்காக நாம் குரல் கொடுப்போம்



"சிறுவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். சிறுவர்களே இந்த நாட்டின் பெறுமதியான வளங்கள். சிறிய தீவு என்றாலும் மனித வளங்களே பெறுமதியானவர்கள். சிறுவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். அதற்காக நாம் குரல்கொடுப்போம் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, தவறொன்று நடந்திருந்தால், அதற்கு நீதிமன்றமே இறுதித் தீர்மானத்தை எடுக்கவேண்டும். யார் என்றாலும் பரவாயில்லை. கொள்கை ரீதியான கட்சி என்ற ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு

தொடர்ச்சி 2




## வெள்ளைக் காரொன்று மல்லாக்கப் புரண்டது

(படம்: வா. கிருஸ்ணா)

மட்டக்களப்பு நகரின் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில், நேற்று (25) பிற்பகல் கார்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளானதில், ஒருவர் படுகாயமடைந்தார். இதில் காரொன்று மல்லாக்க புரண்டு, பலத்த சேதமடைந்துள்ளது. காயமடைந்தவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 11 வயது சிறுவனுக்கு டெல்டா



பேருவளை சுகாதார வைத்திய அதிகார பிரிவுக்குள், 11 வயதான சிறுவனுக்கு டெல்டா வைரஸ் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சிறுவர்களிடத்தில் டெல்டா பரவுகின்றமை கண்டறியப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

பேருவளை, ஹிரிகல்கொடெல்லவை வசிப்பிடமாகக் கொண்ட இந்தப் பாடசாலை மாணவர், காலி பிரதேசத்திலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 2

## கோழிக்கூண்டுக்குள் சிறுமி; மாமியாருக்கு விளக்கமறியல்



நுரைச்சோலை, ஆலங்குடா பகுதியில் 14 வயது சிறுமியை 2 வருடங்களாக கோழிக்கூட்டில் கட்டி, சித்திரவதை செய்த மாமியாரை, ஓகஸ்ட் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, புத்தளம் மேலதிக நீதவான் எம்.எம். இக்பால் உத்தரவிட்டுள்ளார்.

நுரைச்சோலை, ஆலங்குடா பகுதியில் வசிக்கும் சிறுமியின் மாமியாரான 29 வயதான கிருஷ்ணசாமி நிசன்சாலா என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 2

LK Newspaper

PAGE 1 தொடர்ச்சிகள்

# திரிபு ஆதிக்கம் செலுத்தும்

"எமது எச்சரிக்கையை கவனத்தில் செலுத்தாவிடின், அடுத்தடுத்த கட்டங்கள் மிகவும் ஆபத்தானவையாக மாறக்கூடும்" என்றார்.

"உலகின் ஏனைய நாடுகளில் பரவும் விதத்தைக் கொண்டும், பிற திரிபுகளுடன் ஒப்பிடும்போது டெல்டாவின் பரவல் வேகத்தையும் கொண்டும், இத்திரிபு ஆதிக்கம் செலுத்தும் என்று முடிவு செய்யலாம்" என்றார்.

இதுபோன்ற பின்னணியில், டெல்டா திரிபுக்கான வினைத்திறன் தொடர்பில் போதுமான தரவுகள் இல்லாத கொவிட் 19 தடுப்பூசிகளுக்கு உள்ளூர் வைத்திய அதிகாரிகள் ஒப்புதல் அளிப்பது குழப்பமாக உள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், திரிபுக்கு எதிராகப் போராடக் கூடிய தடுப்பூசிகளை ஏனைய நாடுகள் பயன்படுத்துகின்றன என்றார்.

கொவிட்- 19 நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதாகத் தோன்றும் நிலையில், பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதை மறுபரிசீலனை செய்வதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

# டெல்டா எச்சரிக்கை

குறிப்பாக, ஐரோப்பிய மற்றும் மேற்கு பசுபிக் பிராந்தியங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

சில மேற்கத்தேய நாடுகளில் கொவிட்-19 மரணங்கள் குறைவடைந்துள்ளமையால், அமல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், தடுப்பூசி வேலைத்திட்டம் மந்தகதியாக முன்னெடுக்கப்படும் நாடுகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் செயற்பாடானது எதிர்காலத்தில் அச்சுறுத்தலாக மாறக்கூடும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

# தொண்டமான்களின் வழியிலேயே இ.தொ.கா பயணிக்கும்

பொருளாதாரம் உட்பட ஏனைய உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு, 1939ஆம் ஆண்டு இலங்கை-இந்திய காங்கிரஸாக உருவாக்கப்பட்டது.

அதன்பின்னர், 1954ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக பரிணமித்து, தனது 82ஆவது ஆண்டு நிறைவைக் காங்கிரஸ், நேற்று கொண்டாடியது.

ஸ்தாபகத் தலைவரின் உருவச்சிலைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், உப-தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோர் மலர்மாலைகளை அணிவித்தனர்.

காங்கிரஸின் முக்கியஸ்தர்களும், அன்னாரின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர். (படங்களும் தகவல்களும், இ.தொ.கா ஊடகப்பிரிவு)

முழுச் செய்தி 》》 15

# ரிஷாட்டின் வீட்டில் 'வன்புணர்வுக் கொத்தணி'

தொடர்பில், இதுவரை 30 பேரிடம் வாக்குமூலம்கள் பெறப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள தரகர் பொன்னையாவின் வங்கிக் கணக்கு தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு

சட்டமா அதிபர், சமீபத்தில் ஜனாதிபதியை சந்தித்தார். இதன்போது, மேற்படி விவகாரம் குறித்து ஜனாதிபதி விசாரித்தபோது, விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் சட்டமா அதிபர் விளக்கினார் என்றும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக, சட்டமா அதிபர் திணைக்களம் சில சிறப்புக் குழுக்களை அமைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக 100க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், அவர்களில் சிலர் விளக்கமறியலிலும் ஏனையவர்கள் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 6 மாதங்களுக்குள் 4,740 முறைப்பாடுகள்

சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள், கடந்த மாதத்தில் அதிகமாக பதிவானதாகவும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித்த விதானபத்திரன குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறுவர்கள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவது தொடர்பில் ஆராய்வதற்காக நாடளாவிய ரீதியில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

# 'கிங் மேக்கர்' கிளியின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிறிதுகாலம் சிகிச்சைப் பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்தார். அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக, அன்னாரின் பூதவுடல் பொரளை கனத்தை இந்து மயானத்தின் நேற்றையதினமே மின்தகனம் செய்யப்பட்டது.

மஹாராஜா குழுமத்தின் தலைவர் ஆர்.ராஜமஹேந்திரனின் மறைவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அன்னாரது மறைவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பி தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டுள்ளன.

"இதேவேளை, இலங்கை கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு திரைமறைவில் இருந்து பெரும் பங்காற்றியவர்" என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள் பலரும் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## 'ரிஷாட்டை நீக்குக'

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசியல் பழிவாங்கலுக்காகவே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டுக் கொண்டு அவரைப் பாதுகாக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர்" என்றார்.

இவரது வீட்டில் பணிபுரிந்த 16 வயது சிறுமி தீக்காயங்களுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் மரணித்துள்ளார். இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியாகும் தகவல்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி, பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாயின் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்க வேண்டும்.

சிறுமியின் மரணம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளுக்கு சிறப்புச் சலுகை வழங்கப்படும் என்று மக்கள் மத்தியில் ஒரு கருத்துக் காணப்படுகிறது. குற்றச் செயலுடன் தொடர்புடையவர்களுக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படும். இதில் அரசியல்வாதிகள் மாத்திரம் விதிவிலக்கானவர்கள் அல்லர் என்றார்.

# சிறுவர்களுக்காக நாம் நேரடி குரல் கொடுப்போம்

எதிராக நேரடியாகக் குரல் கொடுப்போம் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த நாட்டின் சட்டத்தை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்த அவர், பெண்கள், சிறுவர்களின் தொழில்கள் தொடர்பில் பல சட்டங்கள் எமது நாட்டில் உள்ளன. அதேபோல சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனத்துக்கும் நாம் இணங்கியுள்ளோம் என்றார்.

"இதில் 3 விடயங்கள் மீதான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எவ்வித பொறுமையுமின்றி உடனடியாக சட்டம் செயற்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, அந்தந்த நாடுகளில் உள்ள சிறுவர்கள் எந்தெந்தத் தொழில்களில் ஈடுபடலாம், ஈடுபடக் கூடாது என்பதை அடையாளம் கண்டு, அதனைத் தடைசெய்வதற்கான உரிமையை அந்தந்த நாடுகளுக்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு வழங்கியுள்ளது" என்றார்.

இதற்கமைய, இலங்கையில் சிறுவர் தொழிலாளர்கள், 51 தொழில்கள் ஈடுபட பொருத்தமற்றவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வீடுகளில் சிறுவர்கள் வேலை செய்வது தடை செய்யப்படவில்லை எனத் தெரிவித்த அவர், அன்றைய அரசாங்கம் தொழிற்சங்கங்கள் என்பன இணைந்து, வீடுகளில் சிறுவர் வேலை செய்வது தொடர்பான தடையை முன்வைக்கவில்லை என்றார்.

எனவே, இந்த விடயம் குறித்து, உடனடியாக ஆராய்ந்து, சிறுவர்களை வீடுகளில் வேலை செய்யும் தொழிலைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்தார்.

மேலும், இது இனவாதத்துடன் தொடர்புடைய பிரச்சினை அல்ல. சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். பெண், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு இந்த நாட்டில் இடமளிக்கப்படாது என்றார்.

# கோழிக்கூண்டுக்குள் சிறுமி; மாமியாருக்கு விளக்கமறியல்

மேலும், சிறுமியின் தந்தையான கிருஷ்ணசாமி ஜூலியட் தேவானந்தாவை ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

சிறுமியைக் கண்டுபிடித்த போது, அவர் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டிருந்ததாக பொலிஸார், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். மேலும், சிறுமியை பாடசாலைக்குக் கூட அனுப்பவில்லை என்றும் தெரிவித்தனர்.

உணவு வழங்கப்படாததால் அருகிலுள்ள வீடுகளில் இருந்து சிறுமி உணவைத் திருடியுள்ளார் என்றும் இதன் காரணத்தாலேயே மாமியார் அவரைத் தாக்கியுள்ளார் என்றும் நீதிமன்றில் தெரிவித்த பொலிஸார், சிறுமியின் உடலில் பல தீக்காயங்கள் காணப்படுவதாகவும் தலை உட்பட சில இடங்களில் காயங்கள் உள்ளன என்றும் தெரிவித்தனர்.

சிறுமிக்கு முறையான உணவு கூட வழங்கப்படவில்லை என்றும், அவருக்கு கடுமையான குடற்புண் நோய் ஏற்பட்டுள்ளமை பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர் தற்போது புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# 11 வயது சிறுவனுக்கு டெல்டா

அங்கு அவருக்கு மேலதிக சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் கடந்த இரண்டு தினங்களில் மட்டும் 12 பேர் மரணித்துள்ளனர்.

மரணமடைந்தவர்களில் பெண்கள் அறுவர் உள்ளனர். கடந்த 22ஆம் திகதியும் நேற்று முன்தினமும் (24) இம்மரணங்கள் பதியப்பட்டுள்ளன.

மரணமடைந்த 12 பேரும், 58 வயதுக்கும் 73 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜமஹேந்திரனின் மறைவுக்கு

# முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் இரங்கல்

சிரச, சக்தி ஊடக வலையமைப்பின் தலைமை நிறுவனமான கெப்பிட்டல் மஹாராஜா குழுமத்தின் தலைவர், ஆர். ராஜமஹேந்திரனின் மறைவுக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் இரகல் தெரிவித்துள்ளனர். .

கடந்த 1980களின் ஆரம்பத்தில் மறைந்த காமினி திஸாநாயக்கவின் கீழ் இலங்கை கிரிக்கெட் சபையின் உபதலைவராக ராஜமஹேந்திரன் கடமையாற்றியிருந்தார்.

முன்னணி கிரிக்கெட் வீரர்களுக்கு அரைத் தொழில்முறை வேலைகளை மகாராஜா நிறுவனத்தில் வழங்குவதில் ராஜமஹேந்திரன் முன்னின்று செயலாற்றியிருந்தார்.

அந்தவகையிலேயே, முன்னாள் அணித்தலைவர்களான மஹேல ஜெயவர்தன, சனத் ஜெயசூரிய, ரொஷான் மஹாநாம, சமிந்த வாஸ் ஆகியோர் டுவிட்டரின் ஊடாக ராஜமேகேந்திரனுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டு

# ஒன்லைன் கற்பித்தலை தொடருங்கள்

## வினயமாக கேட்கிறார் கல்வியமைச்சின் செயலாளர்

அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்கங்கள், தங்களது தற்போதைய தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டு ஒன்லைன் கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்கள், கல்வியைத் தொடர முடியாமல் சிரமப்படுகின்றனர். கொரோனா தொற்றுநோயுடன் நாடு போராடும் இந்த முக்கியமான கட்டத்தில் தங்கள் ஒன்லைன் கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்கங்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகள் கடந்த 24 ஆண்டுகளாக தொடர்கின்றன. ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கைகளில் இதுதொடர்பான மிகப்பெரிய பொறுப்பு உள்ளது.

இந்த விடயம் தொடர்பான ஒரு விரிவான அறிக்கையை கல்வி அமைச்சர் விரைவில் வெளியிடுவார் என்று குறிப்பிட்ட அவர், அவர்களின் கோரிக்கைகள் தொடர்பான அமைச்சரவை பத்திரம் ஏற்கெனவே கலந்துரையாலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சின் செயலாளராக, என்னிடம் எதுவும் இல்லை. ஆனால், உங்கள் ஒன்லைன் கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கச் சொல்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட நாளை (27) வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# காற்றின் வேகம் கூடும்: கடலும் கொந்தளிக்கும்

## கடலுக்குச் செல்வதில் கவனம் என்கிறது திணைக்களம்

காற்று மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனால்,கடலுக்குச் செல்வோரும், கரையோரங்களில் வாழ்வோரும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது

காலி தொடக்கம் மாத்தறை, ஹம்பாந்தோட்டையின் ஊடாக பொத்துவில் வரையிலான கடற்பரப்பிலும் புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலான கடற்பரப்பிலும் காற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

கடும் காற்றும் கடற்கொந்தளிப்பும் இன்று (26) பிற்பகல் 2.30 மணி வரை நீடிக்கும் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கிணங்க, காலியில் இருந்து ஹம்பாந்தோட்டையின் ஊடாக பொத்துவில் வரையும் புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலான கடற்பிராந்தியங்கள் இடைக்கிடையே கொந்தளிப்பாக காணப்படும் என கூறப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால் கடற்றொழிலாளர்களை மிக அவதானத்துடன் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# கண்ணுக்குத் தெரியாத படுகுழிக்குள் இலங்கை விழுந்து கொண்டிருக்கிறது

## முன்னாள் நிதியமைச்சர் மங்கள தெரிவிப்பு

இலங்கை வரலாற்றில் சுதந்திரத்துக்குப் பின்னர் அந்நிய செலாவணி கையிருப்பு மிகவும் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாக இதைக் கருத வேண்டுமெனத் தெரிவித்த முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர, கண்ணுக்குத் தெரியாத படுகுழிக்குள் இலங்கை விழுந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று (25) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி நிதி அமைச்சராக இருந்து தான் பதவி விலகிய போது மத்திய வங்கியின் அந்நிய செலாவணி கையிருப்பு 7.6 பில்லியன் டொலர்களாக இருந்ததாகவும் அந்த தொகை எதிர்வரும் நாள்களில் 2.6 பில்லியன் டொலராக வீழ்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெலிக்கடை படுகொலை நினைவு தினம்:

# தடையை மீறி அனுஷ்டிப்பு

கே.எல்.ரி. யுதாஜித்

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழின அழிப்பைத் தொடர்ந்து, ஜூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள், தேசப்பிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி அடங்கலாக 53 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், 38ஆவது கறுப்பு ஜூலையும் வெலிக்கடை படுகொலை நினைவும் திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கத்தின் முன்பாக, நேற்று (25) சுடரேற்றி அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின்



ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவ்வியக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் (ஜனா) தலைமையேற்றிருந்தார்.

அதில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் வினோநோதராத லிங்கம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உப தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா, கட்சியின் இளைஞர் அணியின் உப தலைவர் இரத்தினஜயா வேணுராஜ் உட்பட ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை நடத்தவிடாது தடுப்பதற்கு பொலிஸார் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும், பொலிஸாரின் தடையை மீறி இந்த நினைவு நிகழ்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சிறுவர் தொழிலாளர்கள்

## விரைவில் தடை

ஹோட்டல்களில் சமைப்பதற்கு, டைல்ஸ்களை வெட்டுதல் போன்ற ஆபத்தான பொருள்களைக் கையாள்வதற்கு, 16 - 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பயன்படுத்துவதற்கு விரைவில் தடை விதிக்கப்பட உள்ளதாக தொழில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் புதிய ஒழுங்குவிதிகளை உருவாக்க, தொழில் திணைக்களம் தயாராகி வருவதோடு, சிறுவர்களை எந்தெந்தத் தொழில்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்பது தொடர்பான பட்டியல் ஒன்றையும் வெளியிட உள்ளதாக அறிய முடிகிறது.

ஆழ்கடல் மீன் பிடித்தல், இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, இரும்பு தொழிற்சாலை, இரசாயன நிறுவனங்களில் பணிக்கு அமர்த்துதல் உள்ளிட்ட தொழில்களில் சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துவதற்குத் தடை விதிக்கப்பட உள்ளது. இதேவேளை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் சிறுவர்களை வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராகி வருவதாகவும் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும்

## எதிர்க்கட்சியினரே கொரோனா கொத்தணிகளை உருவாக்குகின்றனர்



எதிர்க்கட்சியினரே நாடு முழுவதும் கொரோனா கொத்தணிகளை உருவாக்குவதாகத் தெரிவித்த கிராமிய வீதி உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, இலங்கை மட்டுமல்ல, முழு உலகும் கொரோனாவுக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், நாட்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்புக்கு பங்களிப்போ, அதற்கான முன்னுதாரணமாகவோ எதிர்க்கட்சியிடம் காணப்படவில்லை என்றார்.

எதிர்க்கட்சியினர் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாமல் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்வைத்து, நாடு பூராகவும் கொரோனா கொத்தணியை உருவாக்கி வருவதுடன், குறைந்தது அவர்களுக்கு உள்ள பொறுப்பைக் கூட அவர்கள் நிறைவேற்றவில்லை. இது தேர்தலுக்கான நேரமோ அரசியல் ஒழுங்குப் பத்திரத்துக்கு அமைய செயற்படும் நேரமோ இல்லை என்றார்.

நாட்டின் கௌரவம், சமூகப் பெறுமதியை நிறைவேற்ற ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக அவர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் செவிமடுக்கும். இதற்குள் எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் இதனை அரசியலாக்க முயற்சிக்கின்றமை தவறான விடயமாகும். இதனால் பாதிக்கப்படுவது எமது எதிர்கால சந்ததியினரே. எனவே, நாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென, ஆசிரியர் சங்கங்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகளைப் பெறாதவர்களே

## மரணிக்கின்றனர்



கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வருவதாகத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன, தடுப்பூசிகளைப் பெறாதவர்களே கடந்த தினங்களில் அதிகமாக உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர், கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, கடந்த சில தினங்களில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் ஆராய்ந்தபோது, அவர்கள் எவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டிருக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக, கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள நிலையில், தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு, தொற்று நோய்ப் பிரிவின் வைத்தியக் குழுவினர் சென்று, எந்தவகையிலான தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆராய்ந்தனர்.

இதன்போது தொற்றுக்குள்ளாகி இருக்கும் பலர் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இதுவரையில் செலுத்திக்கொள்ளவில்லை என்பது தெரியந்துள்ளது. நாட்டில் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொள்ளாதவர்களே இவ்வாறு தொற்றுக்குள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுக்கு எந்த வகை தடுப்பூசி வழங்கப்படுகிறது என்பதை ஆராய்ந்துகொண்டிருக்காது, சுகாதாரப் பிரிவினர் வழங்கும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலம்;

## எம்.பிகளுக்கும் செயலமர்வு

சர்ச்சைக்குரிய ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுப்படுத்தும் வகையில், செயலமர்வு ஒன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் தொடர்பில் நாடு முழுவதிலும் பல்வேறு போராட்டங்களை ஆசிரிய தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்களது அமைப்புகள் உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

இதேவேளை, இச்சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சியினரும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து வருவதோடு, ஆளுங்கட்சியினர் இச்சட்டமூலத்தில் உள்ள விடயங்களை மேற்கோள்காட்டி எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து வருகிறார்கள்.

இந்நிலையில் இச்சட்டமூலம் தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தும் செயலமர்வு அடுத்த மாதம் 3ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கல்வி தொடர்பான நிபுணர்கள் பலரும் இதில் கலந்துக்கொள்ள உள்ளனர்.

கல்வி தனியார் மயம்;

## சட்டமூலத்தைத் தோற்கடிப்போம்



கல்வியைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக உலகம் முழுவதும் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளதாகத் தெரிவித்த இலங்கை ஆசிரிய சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தைத் தோற்கடிப்போம் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக, இன்று உலகம் முழுவதிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியைத் தனியார் மயப்படுத்திய நாடுகளிலும் அதற்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

அரசாங்கத்துக்கு நாம் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். நீங்கள் நினைப்பதுபோல இது இலகுவானதல்ல. நாம் ஒன்றிணைந்து ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தைத் தோற்கடிப்போம் எனவும் எச்சரித்தார்.



மூத்த சிறப்புகளுடன்

## முகிழ்ந்து நிற்கும் முன்னேஸ்வரம்

### இன்று (26) கொடியேற்றம்; 17/8 – தீமிதிப்பு; 20/8 – வேட்டைத்திருழா; 21/8 – தேர்த்திருழா



உடப்பூர் வீரசொக்கன்

புத்தளம் மாவட்டம் வளங்கள் பலவற்றையும் சிறப்புகளையும் பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட பூமியாகும். தமிழர்களின் பாரம்பரிய இருப்பையும் மேன்மையான நெறிகளையும் பண்பாட்டு, கலாசார விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.

இந்த மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் தேவஸ்தானத்தின் மகோற்சவம் இன்று (26) பகல் 12 மணிக்கு சம்பிரதாயபூர்வ சடங்கு கிரிகைகளுடன் ஆரம்பமாகும்.

இந்தக் கோவில், தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமையின் சின்னமாகும். கோவிலின் உற்சவ காலத்தில் சகோதர மக்களின் நட்புரிமை, அந்நியோன்னியம், சௌஜன்ய உறவுகள் வெளிப்பட்டு, துளிர்த்து நிற்கும் என்றால் மிகையாகாது.

முன்னேஸ்வரம் திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிறப்பைக் கொண்ட, முதன்மைத் தலமாகும். கோணேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் ஆகியவற்றுடன் முன்னேஸ்வரமும் இணைந்து பஞ்சஈஸ்வரங்களில் ஒன்று என்ற பெருமையை இத்திருத்தலம் பெறுகின்றது. பஞ்சஈஸ்வரங்களில் மு ன்னையதாகவும் முதற்சிறப்போடும் இருப்பதால் இக்கோவிலை 'முன்னீஸ்வரம்', 'முன்னோர்சரம்' எனவும் வரலாற்று ஆய்வாளர்களால் விதந்து உரைக்கப்படுகின்றது. முன்னேஸ்வரம் ஸ்ரீமுன்னைநாதப் பெருமான் தேவஸ்தானத்தை, 'தெட்சணாகைலாயம்' எனவும் போற்றப்படுகின்றது.

மூர்த்தி - முன்னைநாதப் பெருமான்; தலம் - முன்னேஸ்வரம்; இணைவி - வடிவழகி; தீர்த்தம் - மாயவன் ஆறு; தலவிருட்சம் - அரசமரம் விளங்குகின்றன. இத்திருத்தலத்தின் சிறப்புகளையும் தெய்வீகத் தன்மைகளையும் பழைமைகளையும் மரபுகளையும் வரலாற்றையும் ஸ்ரீதட்சண கைலாயமாலை, முன்னேஸ்வர வரலாறு, முன்னேஸ்வரம் அந்தாதி, கோகிலசந்தேசய போன்ற நூல்களில் காணலாம்.

இத்திருத்தலத்தை இராமர், வியாசகர் வணங்கியதாகவும் அருட்கடாட்சம் பெற்றதாகவும் வரலாற்றுக் குறிப்புகளில் காணலாம். இக்கோவிலை, சிவபுராணத்து சனத்குமார சம்ஹிதையில் அலகேஸ்வரம் என வும் அறுபத்துநான்கு சக்திபீடங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. திருத்தலத்தின் பெருமைக்குக் கோடிட்டுக் காட்டுவதாக, இவ்வாலய பொறுப்பில் 'குறட்டுக்காசி' என்ற நாணயம் வெளியிடப்பட்டமை அமைகின்றது.

இராமபிரான், சீதாபிராட்டியைத் தேடி இலங்கை வந்து, இராவணனை சம்ஹாரம் செய்தபோது, இராமனை பிரமஹத்தி தோஷம் பிடித்ததாகவும் மீண்டும் புஷ்பவிமானத்தில் பாரதம் செல்லும்போது, முன்னேஸ்வரம் கோவிலைக் கடக்கும்போது, தனது தோஷம் நீங்கியதை அறிந்த இராமபிரான், கோவிலுக்கு வந்து, சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து, பூசை வழிபாடுகளை மேற்கொண்டதாக தட்சிணகைலாய மகாத்மியம் குறிப்பிடுகின்றது.

**குளக்கோட்டு மன்னனின் திருப்பணி**

குளக்கோட்டு மன்னன் முன்னேஸ்வரம் வந்து, ஆக்கத் திருப்பணிகளை ஆத்மார்த்தமாக மேற்கொண்டுள்ளார். இப்பணிகளை மேற்கொள்ளும் முகமாக, பலவகையான தொழில் செய்வோரை வரவழைத்து, அவ்விடங்களுக்கு காரணப்பெயர்களைச் சூட்டி, திருப்பணிகளை மேற்கொண்டார். கோவில் சூழலில் 64 தமிழ்க் கிராமங்களை உருவாக்கினான். இக்கிராமங்கள் இன்று பெரும்பான்மையினக் கிராமங்களாக மாற்றமடைந்துள்ளன. ஆறாவது பராக்கிரமபாகு, ஒன்பதாவது பராக்கிரமபாகு போன்ற மன்னர்களும் இக்கோவிலுக்கு திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

**கர்ண பரம்பரைக் கதை**

ஒருமுறை இக்கோவிலை அண்மித்துள்ள குளத்தில், மீனவன் ஒருவன் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, சிறுவன் ஒருவன் அழகிய சௌந்தரிய வதனம் நிறைந்த சிறுமியுடன் ஒடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான். செம்படவன் இவர்களை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த போது, சிறுவர்கள் அச்சமயம் மாயமாக மறைந்துவிட்டார்கள்.

ஆச்சரியமடைந்த மீனவன், மறுநாள் புதர் ஒன்றினுள் மறைந்திருந்து, சிறுவர்களைப் பிடிக்க முயன்றான். சிறுவனும் சிறுமியும் விளையாடிக் கொண்டிருந்தபோது, மீனவன் புதரிலிருந்து வெளிப்பட்டு, அவர்களைப் பிடிக்க முயன்றான். சிறுவன் மறைந்துவிட, சிறுமி பொன்னிற விக்கிரமமாக மாறினாள்.

இச்செய்தி காட்டுத்தீ போல் ஊருக்குள் பரவியது. இதைக் கேள்வியுற்ற அப்பகுதியை ஆண்ட அரசன், இதன் உண்மைத் தன்மையை அறியும் முகமாக, பிடிபட்ட விக்கிரகத்தைப் போல் பல விக்கிரகங்களைச் செய்து, சிறுமியின் விக்கிரகத்தைக் கண்டுபிடிக்குமாறு கட்டளையிட்டான்.

அரசனின் கட்டளைக்குப் பயந்த மீனவன், நிம்மதியின்றித் தவித்தான். அம்மன் கனவில் தோன்றி, "எந்த விக்கிரகத்தின் வலது கால் சிறிது அசைகிறதோ, அந்த விக்கிரகத்தை அடையாளம் காட்டவேண்டும்" என்றது. மறுநாள், மீனவன் வலதுகால் சிறிது அசைந்த விக்கிரகத்தை அடையாளம் காட்டி, தான் கண்ட கனவையும் மன்னனிடம் எடுத்துரைத்தான். அனைத்தையும் உணர்ந்துகொண்ட மன்னன், அம்மனின் திருவுருவத்துக்கு முறைப்படி, பூஜை செய்து வணங்கி வந்தான்.

**இழப்பாடு**

போர்த்துகேயரின் வருகையை அடுத்து, 1578ஆம் ஆண்டு, முன்னேஸ்வரம் கோவில் தரைமட்டமாக்கப்பட்ட சோக சம்பவம் இடம்பெற்றது.

ஆன்மிகச் சூழலைப் பறைசாற்றும் முன்னேஸ்வரம் கோவில் சூழலில், மேற்கே ஸ்ரீ ஜனநாயக்க கோவிலும் அதையடுத்து ஸ்ரீபிரித்திகா கோவிலும் வடக்கே பத்திரகாளி அம்மன் கோவிலும் தெற்கே ஸ்ரீ நல்லவிநாயகர் கோவிலும் விகாரையும் அமைந்திருந்து ஆன்மிகச் சுடரை ஒளிவிட்டுப் பிரகாசித்த வண்ணமுள்ளன.

**பூசை வழிபாடுகள்**

இக்கோவிலின் பூசை புனர்க்காரங்கள், நித்திய நைமித்தியங்கள் காலக்கிரிகையின்படி முறைப்படி நேர்த்தியான முறையில், சந்திப்பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாம்காலப் பூசை, அர்த்தகாலப் பூசை ஆகிய ஆறு காலப்பூசைகள் முறைப்படி நடைபெறுகின்றன.

**63 சிவனடியார் பூசை**

இலங்கையில் உள்ள சிவாலயங்களில், முன்னேஸ்வரத்தில் மட்டுமே, 63 நாயன்மார்களுக்கும் விழாவெடுத்துச் சிறப்பிக்கும் முறையும் கொண்டாட்டமும் நிகழ்வுற்று வருகின்றது.

**முக்கிய உற்சவங்கள்**

கொடியேறிய தினத்தில் இருந்து 28 தினங்கள் உற்சவங்கள் களைகட்டும். இந்த உற்சவங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல், எதிர்வரும் 17ஆம் திகதி தீமிதிப்பு விழா மாலை ஐந்து மணிக்கும் 20ஆம் திகதி வேட்டைத்திருவிழா மாலை ஆறு மணிக்கும் தேர் உலா 21ஆம் திகதியும் தீர்த்தம் 22ஆம் திகதியும் நடைபெறும்.

உலகத்தை ஆட்டிப்படைக்கும் கொடிய நோயாகிய கொவிட்-19 பெருந்தொற்று நோயிலிருந்து விடுபட எல்லாம் வல்ல முன்னைநாதனை வேண்டித் துதிப்பதோடு, இந்த உற்சவங்கள் அனைத்தும் நாட்டில் நடைமுறையில் உள்ள சுகாதார நெறிமுறைகளுக்கு அமைய நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

KNewspapers

தன்னுடைய தார்மிகக் கடமையில் இருந்து

# இந்தியா விலகி இருக்கின்றதா?

■ நடராஜா கிருஸ்ணகுமார்

தமிழர்கள் விடயத்தில் இந்தியா இறுக்கமான நடவடிக்கை எடுப்பதற்கு பின்னடிப்பதானது, இந்தியா தன் தார்மிகக் கடமையில் இருந்து விலகி இருக்கின்றதா என்ற கேள்வி எழுவதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தற்பொழுது மேற்கத்தேயம், தமிழ் மக்களுடைய பிரச்சினையைக் கையாண்டு, அதன்மூலம் ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஒரு கடிவாளத்தைப் போடுவதற்கு யோசிக்கலாம். ஆனால், மேற்குலகம் மறுபடியும் ஒரே தவறைச் செய்கின்றது.

அனைத்துத் தமிழ்த் தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குரிய செயற்றிட்டங்களை வகுக்காமல், தனியே கூட்டமைப்புடன் அவர்கள் சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

பெசில் ராஜபக்ஷவை அரசாங்கத்துக்குள் கொண்டு வந்து இருக்கும் செயற்பாடானது, தென்னிலங்கையில் ஏற்பட்டு இருக்கின்ற அதிர்ச்சிகளைக் களைவதற்கும் தங்கள் அதிகாரங்களை நீடித்து இரண்டாவது தடவையாகவும் தாங்கள் வெற்றி பெறுவதற்குமான முயற்சியாகவும் இருக்கின்றது.

அத்துடன், 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற சித்தாந்தத்தில் இருக்கின்ற இந்த அரசாங்கம், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ள கூடிய ஓர்



அரசியலமைப்பைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்த சிவசக்தி ஆனந்தன், "ஏனெனில் அவர்கள் ஆட்சிக்கு வரும்போதே, இந்த நாட்டில் இனப் பிரச்சினை என்று ஒன்றும் இல்லை" என்று கூறியவர்கள் என்றார்.

"அப்படிப்பட்டவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள கூடிய அரசியலமைப்பைக் கொண்டு வருவார்களா என்பது சந்தேகமே. ஒருவேளை கொண்டுவந்தாலும் மாகாண சபை அதிகாரத்தை மலிதாக்கி, பெரும்பான்மை கட்சிகள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான, தேர்தல் முறைகளை மாற்றித்தான் அரசியலமைப்பை கொண்டுவருவார்கள்" என்றார்.

நஞ்சற்ற விவசாயத்தால்

# வாழ்வு நீடிக்கும்

■ வி.சுகிர்தகுமார்

நஞ்சற்ற விவசாயத்தால் மாத்திரமே மக்களின் ஆரோக்கியமான வாழ்வு நீடிக்கும் என்ற உன்னத உண்மையை, உலகம் இன்று உணரத் தலைப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கான கூட்டம், அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நேற்று (25) காலை நடைபெற்றது.

சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை, உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைப்பது என்ற முடிவை உத்தியோகபூர்வமாக உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்குத் தெரிவிப்பதற்காக இக்கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு ஆளுநர் மேலும் உரையாற்றுகையில்,

இன்றைய நவீனத்துவம், பண்டைய காலத்தை நோக்கிச் செல்லத் தலைப்பட்டுள்ளதைக் காணலாம். அதனை அடியொட்டியே, சேதனப் பசளை பாவிக்கும் யுகத்தை நோக்கி இலங்கையும் பயணிக்கின்றது.

விவசாயத்தில் இரசாயனப் பசளைகளை பாவித்ததால் துரதிர்ஷ்டமான பலாபலன்களை நாடு அனுபவித்து வருகின்றது. பண்டைய காலத்தில் நம் முன்னோர்கள் பாவித்த சேதனப் பசளைகளை நாமறிவோம். அதனால், அவர்கள் 100 வயது வரை நோய்களின்றி தேகாரோக்கியத்துடனும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.

ஆனால், பசுமைப் புரட்சி என்ற போர்வையில் விவசாயிகள் இரசாயனப் பசளைகளைப் பாவிக்க ஊக்குவிக்கப்பட்டார்கள். அதனால் இன்று உணவுப் பாதுகாப்பு என்பது அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இரசாயனமின்றி விவசாயம் செய்யமுடியாதென்ற நிலைக்கு இட்டுச் சென்றது. விளைவாக மக்கள் புற்றுநோய், சிறுநீரக நோய் எனப் பல நோய்களால் பீடிக்கப்பட்டனர். மக்களின் வாழ்க்கைக் காலமும் சுருங்கியுள்ளது.

எனவே, நாம் மீண்டும் பண்டைய யுகத்துக்குச் செல்ல வேண்டும். சேதனப் பசளைகளை உற்பத்தி செய்து, எமது விவசாயத்தை வளம்படுத்த வேண்டும். அதனூடாக நோய்களற்ற தேகாரோக்கியமான சமுதாயமொன்றை உருவாக்கவேண்டும் என்றார்.



## அபிவிருத்தி ஆரம்பம்...

கிளிநொச்சி, ஆனந்தபுரம் மேற்கு, நாவலர் வீதிக்கான அபிவிருத்தி பணிகள், நேற்று முன்தினம் (24) ஆரம்பித்து வைக்கப்பட்டன.
(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)

வடமாகாண பிரதம செயலாளர் நியமனம்:

# ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பத் தீர்மானம்

வட மாகாண பிரதம செயலாளர் நியமனத்தில் மாற்றம் செய்யுமாறு, வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர், முன்னாள் உறுப்பினர்கள், அவைத்தலைவர் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வட மாகாண பிரதம செயலாளராக சமன் பந்துலசேன ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (24) யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே, இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.



மணல் கொள்ளை:

# 23 சாரதிகளுக்கு பொலிஸ் பிணை

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரதேசத்திலுள்ள ஐந்து இடங்களில் மணல் கொள்ளையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில், நேற்று முன்தினம் (24) கைதுசெய்யப்பட்டிருந்த சாரதிகள் 23 பேர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், எதிர்வரும் 28ஆம் திகதி ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி வாவிக்குள் மணல் அகழ்வில் ஈடுபட்டமை, ஏற்றிச்சென்றமை இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளாகும்.

கரடியனாறு பொலிஸார், அறந்தலாவ விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, இச்சட்டவிரோதச் செயற்பாடு தடுக்கப்பட்டுள்ளது.

முந்தன் குமாரவெளி வாவியில் மணல் அகழ்ந்த 10 உழவு இயந்திரங்கள் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, கொஸ்கொல்ல, ஈரளக்குளம், மரப்பாலம், இலுப்படிச்சேனை ஆகிய பிரதேசங்கள் ஊடாக அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரங்களையும், கரடியனாறு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு சந்தேகநபர்களின் 3 டிப்பர் வாகனங்கள், 20 உழவு இயந்திரங்கள் ஆகியன கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் இருதரப்பு சந்திப்பு



■ கே.எல்.ரி.யுதாஜித்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று, களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ், கட்சியின் மட்டு அம்பாறை ஊடகப் பேச்சாளர் சாந்தன் உட்பட கட்சியின் மட்டக்களப்பு நிர்வாகிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், முன்னாள் போராளிகள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்தும், அண்மையில் சமூகவலைத்தள பதிவு தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுப்பிலுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் நாகராசா பிரதீபராசாவின் வழக்கு விடயங்கள் தொடர்பிலும் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டன.



வாகனம் இன்மையால்

# கழிவகற்றலில் சிரமம்

■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, கரைதுறைபற்று பிரதேசத்தில், பெரிய கழிவகற்றல் வாகனம் இல்லாமையால் கழிவகற்றலில் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதாக, கரைதுறைபற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தற்போது கழிவகற்றலில் ஆறு உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த உழவு இயந்திரங்களைப் பாதுகாப்பான முறையில் கழிவகற்றல் நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இவற்றில், ஓர் உழவு இயந்திரம் பாதுகாப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. இன்னோர் உழவு இயந்திரம் பாதுகாப்பான கழிவகற்றலுக்காகத் தயார்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏனைய மாவட்டங்களில் காணப்படுகின்றது போல், கரைதுறைப்பற்று பிரதேச சபையில் பெரிய கழிவகற்றல் வாகனம் இல்லை. இதனை மத்திய அரசாங்கம் வழங்கலாம். எம்மிடம் உள்ள வாகன வளங்களை வைத்துக் கொண்டுதான் சிறப்பாக கழிவகற்றலை எமது பிரதேச சபை எல்லைப் பகுதியில் மேற்கொண்டு வருகிறோம் என்று, தவிசாளர் தெரிவித்தார்.

பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான

# முதிரை மரக்குற்றிகள் மீட்பு; ஐவர் தப்பியோட்டம்

■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் இருந்து சட்டவிரோதமாக கடத்தப்படவிருந்த முதிரை மரக்குற்றிகளுடன், ஒருவர், நேற்று (25) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஐவர் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது, சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தப்பியோடியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையில், புதுக்குடியிருப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றெட்பானா பகுதியில் இருந்து, மரக் கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாக, புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், மரக்குற்றிகளை மீட்டதுடன், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பூநகரி – கௌதாரிமுனை வீதி புனரமைப்புக்கு

# 1,300 மில்லியன் ரூபாய் நிதி தேவை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி - கௌதாரிமுனை வீதியைப் புனரமைப்பதற்கு சுமார் 1,300 மில்லியன் ரூபாய் நிதி தேவை என, வீதி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, திணைக்களத்துக்குச் சொந்தமான மிக நீண்ட வீதிகளாகக் காணப்படுகின்ற 16 கிலோ மீற்றர் நீளமான பேய்ப்பாறைபிட்டி - கல்லாறு வீதி, 13 கிலோ மீற்றர் நீளமான கௌதாரிமுனை - பூநகரி வீதி என்பன புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாகவும்,



மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகவே, குறித்த கௌதாரிமுனை - பூநகரி வீதியைப் புனரமைப்பதற்கு, 1,300 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட நிதி தேவையென திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமைக்கு

# முஸ்லிம் அரசியலாளர்கள் தடையாக உள்ளனர்

■ சகா

நாங்கள், தமிழ்த் தேசிய அரசியல், தமிழ் பேசும் இனம் எனும் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றோம் எனத் தெரிவித்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், தமிழ் பேசும் இனம் எனும் அடிப்படையில் இரு சமூகங்களுக்கும் ஒற்றுமை அவசியம் என வலியுறுத்தினார்.

எனினும், இந்த ஒற்றுமை அரசியல்வாதிகள் இடையே குறைவாகவே உள்ளது எனவும் குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒற்றுமைக்குத் தடையாக உள்ளனர் எனவும் அவர் சாடினார்.

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட மீனவர்களின் படகுகளிலிருந்து ஆழ்கடலில் வைத்துக் களவாடப்படும் மீன்கள், கருக்குவலைகள் தொடர்பில், காரைதீவிலுள்ள மாளிகைக்காடு - அந்நூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மீனவர்களுடனான கலந்துரையாடலின் போதே,

> வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் இருப்பு சம்பந்தமாகவும் மேலும் பல விடயங்கள் சம்பந்தமாகவும் பாராளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் எடுத்துரைத்து வருகின்றோம். ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் அப்படியில்லை

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் இருப்பு சம்பந்தமாகவும் மேலும் பல விடயங்கள் சம்பந்தமாகவும் பாராளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் எடுத்துரைத்து வருகின்றோம். ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் அப்படியில்லை.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இரு சமூகத்தையும் குழப்புகின்றனர். இதனாலே தமிழ் பேசும் மக்களிடையே பிரிவு ஏற்பட்டுள்ளது என்றார்.



மணல் அகழ்வு பாதிப்புகள்;

# எம்.பிக்கள் கள ஆராய்வு

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாதன்ஓடையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான கள நிலைமைகளை ஆராய்வதற்காக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர், நேற்று (25) காலை அப்பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது, வெருகல் பகுதியிலுள்ள விவசாய சங்கங்கள், சமூக அமைப்புகள், வெருகல் பிரதேச சபையின் தவிசாளர், கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள், மணல் அகழ்வால் வெருகல் பகுதியில் ஏற்படப்போகும் பாதிப்புகள் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

LKNewspapers

எமக்கு ரிஷாட்டை பாதுகாக்கும்,

# பலிகடாவாக்கும் தேவை இல்லை

## வேலுகுமார் எம்.பி தெரிவிப்பு

ரிஷாட் பதியுதீனை சட்டத்தின் பிடிக்குள் இருந்து பாதுகாப்பதற்கோ அல்லது அரசியல் ரீதியில் அவரை பலிகடாவாக்குவதற்கோ எமக்கு எவ்விதத் தேவையும் கிடையாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், நீதிக்காகவே நாம் போராடிவருகின்றோம் என்றார்.

கொள்கை மறந்து, தாவல் அரசியல் நடத்தும் டிலான் பெரேரா போன்றவர்களுக்கு நீதிக்கான எமது குரல், நீலிக்கண்ணீராகத் தெரிவது குறித்து வியப்படையத் வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

"பாராளுமன்றத்தில் ரிஷாட் பதியுதீனுக்காக முஜிபூர் ரஹ்மான் எம்.பி உரையாற்றும்போது, மனோ கணேசன், திகாம்பரம், வேலுகுமார் ஆகியோர் கைதட்டி உற்சாகப்படுத்தினர். மறுபுறத்தில், தமிழ் ஊடகங்களில் பிரசாரம் தேடுவதற்கு நீதி கோருகின்றனர்" என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் ஜுலை 21ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, டிலான் பெரேரா எம்.பி கருத்து வெளியிட்டிருந்தார்.



இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே வேலுகுமார் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

"டயகம சிறுமி சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் எமக்கு அறியக்கிடைத்ததும், மறுநொடி முதலே அது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம். இப்பிரச்சினையை மனித நேயத்துடன் அணுகுவதுடன், தேவையான நேரத்தில் அரசியல் ரீதியிலான அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றோம்.

"எதிலும் எப்படியும் அரசியல் நடத்தி, அரசியல் இலாபம் தேடிவிட வேண்டும் என்ற குறுகிய கொள்கையை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்திவரும் டிலான் பெரேரா போன்றவர்களுக்கு இது புரியாது. அவ்வாறு புரிந்தாலும் அது தொடர்பில் போலியான தகவலையே பரப்புவார்கள்.

"ஏனெனில், அவர்களின் அரசியல் 'ஸ்டைல்' அதுதான். அங்கும் இங்குமாகத் தாவித் தஞ்ச அரசியல் நடத்துபவர்களுக்கு நீதிக்கான குரல்கூட வேறு விதத்தில்தான் விளங்கும்" என்றார்.

# தொண்டமான்களின் வழியிலேயே இ.தொ.கா பயணிக்கும்



அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் வழியிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்து பயணிக்கும் என, காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் இந்திய வம்சாவளி மக்கள் குறித்தே இ.தொ.கா எப்போதும் சிந்தித்துச் செயலாற்றுவதுடன், மக்களின் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 82ஆவது ஆண்டு விழாவையொட்டி, ஊடகங்களுக்கு நேற்று (25) அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல், தொழிற்சங்க, பொருளாதாரம் உட்பட ஏனைய உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு, 1939ஆம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸாக உருவாக்கப்பட்டதாக அவர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பின்னர், 1954ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக பரிணமித்து, 82ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் பெருமிதம் கொள்வதாகவும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.





இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: வெள்ளையர் காலம் முதல் இன்றுவரை இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல், தொழிற்சங்க, பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு எவருடனும் சமரசமின்றி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டு வருகிறது.

பிரஜா உரிமையற்ற சமூகமாக இருந்த இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஆளும் அரசாங்கங்களுடன் இணைந்து, தொடர் பேச்சுவார்த்தைகள், போராட்டங்களை நடத்தி, பிரஜா உரிமையைப் பெற்றுக்கந்து இ.தொ.காதான்.

அதேபோன்று, யுத்தகாலத்தில் கொழும்பிலும் மலையகத்திலும் பெரும் நெருக்கடிக்கு உள்ளான மலையக இளைஞர், யுவதிகளையும் எமது மக்களையும் இ.தொ.காவே பாதுகாத்திருந்தது.

யுத்தத்தின் பின்னர், 2009ஆம் ஆண்டு இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாகவே, இன்று மலையகம் முழுவதும் இந்திய அரசாங்கத்தான் நிதி உதவியுடன் வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுமியின் வயிற்றில் இரட்டைக் குழந்தைகள்

## இளைஞனுக்கு விளக்கமறியல்

■ பாலித ஆரியவன்ஸ

ஹாலிஎல, லந்தேவல பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமியொருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 21 வயது இளைஞன் ஒருவர் ஹாலி எல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி நோய்வாய்ப்பட்டதை அடுத்து, அவரது பெற்றோர், சிறுமியை, பதுளை பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது, சிறுமி கர்ப்பம் தரித்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், 5 மாதங்களான இரட்டைக் குழந்தைகள் சிறுமியின் வயிற்றில் வளர்கின்றமை வைத்திய பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபரான இளைஞன், பிரதேசத்திலிருந்து தலைமறைவாகி இருந்தார்.

எனினும், ஹாலிஎல பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்து, அவரை பதுளை பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய நிலையில், சந்தேகநபரை அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# கஞ்சா செடிகள் வளர்த்த இருவர் கைது

■ சேஹ்ன் செனவிரத்ன

தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹிகல பிரதேசத்தில் சுமார் 11 அடி உயரத்தில் 10 கஞ்சா செடிகளை வளர்த்த இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலாத்துஓயா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் (24) இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை, நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஒ லிபண்ட் கீழ் பிரிவு

# தோட்ட வீதியை புனரமைக்கவும்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட, சாந்திபுர வட்டாரத்தில் ஒலிபண்ட் கீழ் பிரிவு தோட்டத்துக்குச் செல்லும், பிரதான வீதியின் அவல நிலையைப் போக்க, நுவரெலியா பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல வருடங்களாக, இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படாமையால், பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட அரசியல் தலைமைகளின் கவனத்துக்கும் முறைப்பாடுகள் அளித்தும், இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தோட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என இத் தோட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி...





பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் மரணமடைந்த டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, இறாகலை, கொட்டகலை, மாத்தளை, செனிக்கமர், தலவாக்கலை ஆகிய இடங்களில், மலையக சமூக அமைப்புகளால் நேற்று (25) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.






பதுளையில் ஊவா மாகாண சபைக்கு முன்பாக, பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையிலும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.









(படங்கள்: எம். கிருஸ்ணா, ஆ. ரமேஸ், ஜயக்குமார் ஷான், எம். செல்வராஜ், துவாரக்ஷான், கேதீஸ், நீலமேகம் பிரசாந்த்)



# தலையைச் சுற்றி மூக்கைப் பிடிக்கும் அதிமுட்டாள்தனம்

ஒரு சம்பவத்துக்குப் பின்னர், அச்சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து, விசாரணைக்கு உட்படுத்தி, சட்டத்தின் முன்னிறுத்தி, தண்டனையைப் பெற்றுக்கொடுப்பது ஒருபுறம் நடந்தேற, எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவகையில், திட்டங்களை வகுப்பது மற்றுமொரு தளத்தில் இடம்பெற்றவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் வேலைக்காரியாக இணைத்துக்கொள்ளப்பட்ட தலவாக்கலை-டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமியின் மரணத்துக்குப் பின்னர், பெண்கள்-சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் வன்புணர்வுகள், வன்கொடுமைகள், சீண்டல்களுக்கு எதிராக, பல்வேறு தளங்களிலும் குரல்கள் எழுப்பப்படுகின்றன.

ஆக, மலையகம்சார் அரசியல்கட்சிகள் உண்மையில் அரசியல் இலாபத்துடன்தான் போராட்டங்களை முன்னெடுத்தன என்பது வெளிப்படை. ஏனெனில், கட்சி, அரசியல் பேதமின்றி, அனைவரும் ஒரே குடையின் கீழ்நின்று, ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தால் அர்த்தபுஷ்டியாக இருந்திருக்கும்.

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குத்தான் கொண்டாட்டம்'. அதேபோல, சிறுமிகள், பெண்கள், வீட்டுவேலைகளுக்கு எதிர்காலத்தில் மலையகத்திலிருந்து சென்றுவிடக்கூடாது. தற்போது, வீட்டு வேலைகளுக்குச் சென்று சிக்கிக்கொள்பவர்களை மீட்டெடுப்பதற்கான பணிகளிலும் மலையகம் சமூகம்சார் அரசியல் கட்சிகள், ஓரணியில் இன்னுமே திரளவில்லை என்பது வெட்கித் தலைகுனியச் செய்கின்றது.

ஒவ்வோர் அரசியல் கட்சியும் அரசாங்கத் தரப்பும், சமூகம் சார் அமைப்புகளும் ஓரணியில் திரண்டு, ஒரே கோரிக்கையை முன்வைக்கவேண்டும். இல்லையேல், கூத்தாடிகளுக்குத்தான் கொண்டாட்டமாகிவிடும்.

பெருந்தோட்டங்களில் இருந்து வெளியிடங்களுக்கு வீட்டு வேலைக்களுக்காக சென்றிருப்பவர்களை, ஒவ்வொரு தோட்டத்திலும் இருக்கும் உங்களுடையதும் தங்களுடையதும் கட்சியைச் சார்ந்த பிரதிநிதிகளை நியமித்து, ஒரே இரவில் தகவல்களைத் திரட்டிக்கொள்ளலாம். அதனை, பொறுப்புவாய்ந்த அரச நிறுவனத்திடம் கையளிப்பதன் ஊடாக, மிக இலகுவில் மீட்டெடுத்துவிடலாம்.

அதற்குப் பின்னர், அவ்வாறானவர்களும் வருங்கால சந்ததியினரும், 'வீட்டு வேலை'க்குச் சென்றுவிடாத வகையில், தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டலாம். 16 வயதுக்கு கீழ்பட்ட எவரும், கொழும்பு உள்ளிட்ட நகர்புறங்களுக்கு வேலைவாய்ப்புகளுக்காக அழைத்துச் செல்லப்படுவது தெரிந்தால், அவ்வாறானவர்களை இலகுவில் கைது செய்துவிடலாம்.

ஆக, மலையக அரசியல்கட்சிகளும் தொழிற்சங்கங்களும், தகவல் திரட்டுவதைப் பார்க்குமிடத்து, நேராக மூக்கைப் பிடிக்க முடிந்தாலும், தலையைச் சுற்றி மூக்கைப்பிடிக்கும் மிக முட்டாள்தனமான செயற்பாடுகளுக்கே பரிந்துரை செய்துள்ளன. இது, மறைந்திருப்பதற்கும் தகவல்களை மறைப்பதற்கும், தகவல்களைக் கசியவிடாதிருப்பதற்கும் மிகவும் இலகுவான வழிகளைச் சமைத்துக்கொடுப்பதாகும்.

வீட்டு வேலைகளில் சிக்கிக்கொள்வோரை மீட்டெடுக்கும் மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டும். இல்லையேல், கருகிக்கொண்டிருக்கும் இன்னும் பல மொட்டுகளைக் காப்பாற்றமுடியாது; எதிர்காலத்தில், இவ்வாறான அகோரங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கவும் முடியாது என்பதே கசப்பான படிப்பினையாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

ஒருவருக்கு நீங்கள் உதவி செய்யும்போது, அதைப் பெற்றுக் கொள்பவர்கள் தகுந்த முறையில் உபயோகிக்கின்றார்களா எனத் தெரிந்து கொள்வது நல்லது.

ஒருவரிடமிருந்து கடனாகப் பணத்தைப் பெற்று, தீயவழியில் பணத்தைச் செலவிடும் பலரை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

மனைவி, பிள்ளைகளின் தேவைகளை உணராமல் பொறுப்பற்று இயங்கும் பேர்வழிகள் செயலை என்னவென்பது?

இதனால், உதவி பெறுபவர்கள் கடனாளிகளாகவே காலத்தை ஓட்டுவதுடன், கடமையை உணராது, குடும்பத்தை நடுத்தெருவில் விட்டுவிடுகிறார்கள்.

எல்லா மனிதர்களுக்கும் அறிவு உண்டு. ஆனால், பலர் அதனை மீறி, புலனடக்கமின்றி, அறிவை மூடிக்கொள்கின்றார்கள். பண்பின் வலு புரியாதவர்கள், காலம் அவர்களைத் தண்டிக்கும் போது, எந்த நன்மையும் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. கட்டுப்பாடுகள், எங்களை நிலை நிறுத்துவதற்கேயானது. கட்டுப்பாடுகள் சிரமமானது இல்லை. புவனத்தை புனிதமாக்குவதே, மாந்தர் பணியாகும்.

பருத்தியூர் பால- வயிரவநாதன்

## கழதங்கள்

### பயிர்களை அழிக்கும் கட்டாக்காலிகளை கட்டப்படுத்தவும்

கிளிநொச்சி, இரணைமடு குளத்தின் கீழான பண்ணங்கண்டி, சின்ன காடு, முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கைகளை, இரவு வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருவதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக, பகல் வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள், நெற்செய்கைக் காணிகளுக்குள் நுழையும்போது, விவசாயிகளால் செய்கைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், இரவு வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் சிறுபோக நெற்செய்கைகளை அழித்து வருகின்றன.

குறிப்பாக, வயல் நிலங்களுக்கு அண்மித்த பகுதிகளில் கால்நடைகளைக் கட்டிப் பராமரித்தல், பட்டிகளை வைத்திருக்க முடியாது என்ற தீர்மானங்கள், கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி கூட்டத்தின்போது, எடுக்கப்பட்டிருக்கின்ற போதும், அவை நடைமுறைப்படுத்தவில்லை.

தற்போது நாட்டில் நிலவும் நோய்த் தொற்று, காரணமாக விவசாயிகள் உட்படப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமக்குத் தேவையான உரம், கிருமிநாசினி என்பவற்றை, பெரும் சிரமங்களை எதிர்கொண்டு, பலமடங்கு அதிகரித்த விலைகளில் பெற்று, பயிர்ச்செய்யும் நிலையில், கால்நடைகள் அழித்து வருவதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

சிறுபோக அறுவடைக்கு இன்னும் குறிப்பிட்ட சில நாள்களே உள்ள நிலையில், கட்டாக் காலிகளை கட்டுப்படுத்துவதற்கு, உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–டிது பாஸ்கரன்

கொடுமைகளின் ஆணிவேர் வெறுப்பு

# 'கறுப்பு ஜூலை': மறக்கக்கூடாத வரலாறு



என்.கே. அஷோக்பரன்

போலந்து நாட்டின், க்ரக்கவ் நகருக்குப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு 2018ஆம் ஆண்டு கிடைத்திருந்தது. போலந்தின் க்ரக்கவ் நகரிலிருந்து ஏறத்தாழ ஒன்றரை மணிநேர பயண தூரத்தில் இருக்கிறது நாஸிகளின் 'ஒஷ்விட்ஸ்' சித்திரவதை முகாம். பல்லாயிரம் யூதர்களை, நாஸிகள் அடைத்துவைத்த பல சித்திரவதை முகாம்களில் ஒஷ்விட்ஸும் ஒன்று.

சித்திரவதை முகாம், யூதர்கள் விஷவாயு செலுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட விஷவாயு அறைகளைக் கொண்டதும், கயிரோடு நிற்கவைத்து கட்டுக்கொல்லப்படும் கொலைச் சுவரைக் கொண்டதுமான கொலைக்களம் அது. இன்று, அந்த முகாம் ஒஷ்விட்ஸ் ஞாபகார்த்த முகாமாக, வரலாற்றின் கொடுமையான பக்கங்களை, அடுத்து வரும் சந்ததிகள் அறிந்துகொள்வதற்காக, பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

யூதர்களின் வெட்டப்பட்ட தலைமுடிகள், அவர்கள் கொண்டு வந்த பயணப் பெட்டிகள், அவர்களது உணவுத் தட்டுகள், தண்ணீர்க் கோப்பைகள், காலணிகள் என்பவை மாபெரும் மண்டப அளவிலான கண்ணாடிப் பெட்டிக்குள் பல்லாயிரக்கணக்கில் குவிக்கப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டு உள்ளமை எந்த உறுதியான இதயத்தையும் அதிர்ச்சியடைய வைக்கக்கூடியவை.

அங்கு, அடைத்து வைக்கப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த முகாம் அறைகள், உடனடித் தீர்ப்பு வழங்கப்படும் அறை, அதற்கடுத்து, சுட்டுக்கொல்லப்பட முன்பு உடைமாற்றித் தம்மைக் கழுவிக்கொள்வதற்கான அறை, அடுத்து காத்திருப்பு அறை, அதற்கு அப்பால் கொலைச் சுவர் என அந்த முகாமினூடாக நடக்கும் போதே, கால்கள் நடுங்கும்!

ஒரு கட்டடத்தின் அடிப்பகுதியில் சில அறைகள்; அவைதான் விஷவாயு அறைகள் என அங்கிருந்த வழிகாட்டி சொன்னபோது, முதுகுத்தண்டினூடாக மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. அந்த முகாமினூடாக நடந்தபோது, ஏதோ பெரும் அவல ஓலச்சத்தங்கள் ஒலித்துக் கொண்டிருப்பதாகவே காதுகள் உணர்ந்தன. கண்டவை தந்த அதிர்ச்சியால் வந்த மனப்பிரம்மையாக அது இருக்கலாம்.

முதலாவது முகாமைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது, இரண்டாவது முகாமுக்குச் செல்லும் மனப்பலம் இருக்கவில்லை. இந்தச் சித்திரவதை முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களின் (குழந்தைகள் உட்பட) புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வந்திருந்தவர்களில் சிலர், தமது மூதாதையர்களின் படங்களை அடையாளம்கண்டு, கண்ணீர் மல்கினார்கள். அது மனதை நொறுக்கும் காட்சியாக இருந்தது.

அன்றைய தினம், மனம் உறக்கம் கொள்ளவில்லை; சிந்தனைகள் எங்கெங்கோ சென்றன. இன்று ஞாபகச் சின்னமாக மாறியிருக்கும் 'ஒஷ்விட்ஸ் முகாம்', எனக்குள் ஏற்படுத்திய பாதிப்பு, வார்த்தைகளுக்குள் அடங்காது. நாஸிகளின் கொடுமைகள் பற்றி, பல ஆயிரம் பக்கங்களில் எழுதிய எழுத்தின் மூலம் உணரப்பட முடியாததை, அந்த ஞாபகச்சின்னம் உணர்த்தியது என்றால் அது மிகையல்ல. அந்த உணர்வு, நாஸிகளின் கொடுமைகள் பற்றிய உணர்வு மட்டுமல்ல; அது அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் எல்லா மனிதர்களின் மீதுமான உணர்வு; உலகில் இதுபோன்ற கொடுமைகள், இனி அரங்கேறவே கூடாது என்ற உணர்வு; அதனை உணர்வதற்கு யூதனாக இருக்க வேண்டியதில்லை; மனிதனாக இருந்தால் போதும். நிற்க!

இன்று ஞாபகார்த்த இடமாக மாற்றப்பட்டுள்ள ஒஷ்விட்ஸ் சித்திரவதை முகாமின் ஒரு கட்டடத்துக்குள் நுழையும் போது, 'வாழ்வுக்கான காரணம்' (The Life of Reason) எனும் நூலின் ஆசிரியர் ஜோர்ஜ் சன்ரயானா, தனது நூலில் எழுதியிருந்த, 'வரலாற்றிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள், வரலாற்றை மீள அரங்கேற்றுவதற்குச் சபிக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்' என்ற வாசகம், அதன் வாசலில் எழுதப்பட்டிருந்தது.

எத்தனை உண்மையான, பலம் மிக்க வசனம் அது. அன்று ஜேர்மனியை ஆண்ட, முதலாவது உலக யுத்தத்தில் தோல்வியடைந்த ஜேர்மனியை, சில தசாப்தங்களில் மீண்டும் உலகத்தோடு போரிடும் வல்லரசாக மாற்றிய நாஸிகளின் கொடுமைகளைப் பற்றி, இன்று ஜேர்மனியில் கற்பிக்கிறார்கள்; நாஸிகள் நாயகர்கள் அல்ல என்பதைக் கற்பிக்கிறார்கள்; அவர்கள் கட்டவிழ்த்துவிட்ட படுகொலைகளைப் பற்றி, சித்திரவதைகளைப் பற்றிக் கற்பிக்கிறார்கள். இதன் நோக்கம், இனி இதுபோல் ஒரு கொடுமை நிகழ்ந்துவிடக்கூடாது என்பதுதான்.

யூதர்கள், உரோமானியர், நாடோடிகள் ஆகியோரை நாஸிகள் வெறுத்தார்கள். தூய ஜேர்மானிய இனத்தை, இந்த 'அந்நியர்'கள் அசுத்தப்படுத்துவதாக பரப்புரை செய்தார்கள். அந்த வெறுப்பின் காரணமாக, அவர்களை சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பி, பட்டினிபோட்டு, கடும் வேலைகளைச் செய்யவைத்து, சித்திரவதைகளைச் செய்து, அவர்களைத் தமது மருத்துவ ஆராய்ச்சிக்கு ஒரு விலங்கைப் போல பயன்படுத்தி, சுட்டுக்கொன்று, விஷவாயு செலுத்திக் கொன்று என, நாஸிகள் மீது அரங்கேற்றப்பட்ட கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் ஆணிவேர் வெறுப்பு.

1983இல், இலங்கையில் அரங்கேறிய 'கறுப்பு ஜூலை' இன அழிப்பின் அடிப்படையும் வெறுப்புத்தான். உதாரணமாக, 1983 மே 19 ஆம் திகதி, 'தி ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரமான, டி. சில்வா என்ற ஒரு வாசகர் எழுதிய கடிதமானது, பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான வழிகளை முன்வைத்தது. அவர் முன்வைத்த வழிமுறையின் சுருக்கமானது: 'வடக்கு, கிழக்கில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட வேண்டும். பொலிஸ், இராணுவம் ஆகிய படைகள் மேலதிகமாக அனுப்பப்பட்டு, பயங்கரவாதிகள் வேட்டையாடப்பட வேண்டும். அவர்களைக் கண்டவுடன் சுட வேண்டும். பாரம்பரிய தமிழர் தாயகம் என்று சொல்லப்படும் பிரதேசங்களில், சிங்களவர்கள் குடியேற்றப்பட வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் 'ஈழம்' என்ற ஒன்று வழங்கப்படாது என்ற பிரகடனத்தை வெளியிட வேண்டும். வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப் படைகளை வைத்திருப்பதற்கான மேலதிக செலவானது, அங்கு வதிவோரின் மீது விசேட வரியொன்றை விதிப்பதனூடாக ஈடுசெய்யப்படலாம். பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் பாதிக்கப்படுவோருக்கு எந்த நட்டஈடும் வழங்கக் கூடாது' என்றவாறாகக் காணப்பட்டது.

1983ஆம் ஆண்டு, கறுப்பு ஜூலைக் கலவரத்தின் பின்னணியில், இதுபோன்ற கடும் தமிழின வெறுப்பு மனநிலை இருந்தது. இது ஒரே நாளில் வந்ததல்ல; கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டமைக்கப்பட்டது. இதில் இலங்கை அரசியலின் பங்கு முக்கியமானது.

1956ஆம் ஆண்டு முதல், தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வெறுப்பும் வன்முறைகளும் இதற்குச் சாட்சி. இதில் அரச இயந்திரத்தின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

1983ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி, லண்டன் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகைக்கு, இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஒரு குறுஞ்செவ்வியை அளித்திருந்தார். அதில், "யாழ்ப்பாண மக்களின் (தமிழ் மக்களின்) அபிப்பிராயத்தைப் பற்றி, இப்போது நான் கவலைப்படவில்லை; நாம், அவர்களைப் பற்றி யோசிக்க முடியாது. அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ, அவர்கள் எம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் பற்றியோ யோசிக்க முடியாது; வடக்கின் மீது எவ்வளவுக்கு எவ்வளவு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு இங்குள்ள சிங்கள மக்கள் சந்தோஷப்படுவார்கள்" என்று, அப்பட்டமான இனவெறி அரசியலை, வெளிப்படையாக உலகுக்கு அவர் சொல்லியிருந்தார்.

ஆனால், இந்த வரலாறுகள் இலங்கையில் கற்பிக்கப்படுவதில்லை. இன்று கூட, தமிழ் மக்களுக்கு அடைக்கலமும் பாதுகாப்பும் வழங்கிய சிங்கள மக்கள் பற்றிய கருத்தியலை 'கறுப்பு ஜூலை' பற்றிப் பேசும் போது பலரும் முன்வைக்கிறார்கள்.

தம்முடைய உயிரைப் பணயம் வைத்து, பல தமிழ்க் குடும்பங்களைப் பாதுகாத்த சிங்கள மக்கள் பலபேர் இருக்கின்றார்கள். அது உண்மை! ஆனால், 'கறுப்பு ஜூலை' என்பது அவர்களைப் பற்றியது அல்ல. தமிழ் மக்களின் உயிர்களைப் பாதுகாத்த அந்த நல்ல உள்ளங்கள் அங்கிகரிக்கப்பட வேண்டியவையே! ஆனால், 'கறுப்பு ஜூலை' அவர்களைப் பற்றியது அல்ல.

'கறுப்பு ஜூலை'யின் கருத்தியலை, அவ்வாறு மாற்ற முனைவது பெரும் வரலாற்றுத் துரோகமாகும். 'கறுப்பு ஜூலை' என்பது, இந்த நாட்டில் வேர் கொண்டுள்ள இனவெறியைப் பற்றியது. ஆதிக்க மனநிலை கொண்ட பேரினவாதம், சிறுபான்மை இனத்தை இன அழிப்புச் செய்ததன் வரலாறு.

இதில் பெருஞ்சோகம் என்னவென்றால், இதைப் பற்றி முறையான நீதி விசாரணை இடம்பெற்று, குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இதன் பின்னணியில் இருந்தவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை. இது பற்றி, நாம் பேசுவது கூட இல்லை. குறைந்த பட்சம், ஞாபகார்த்த நிகழ்வுகளை அரசு நடத்துவதும் இல்லை. ஒரு ஞாபகார்த்த சின்னம் கூட இல்லை. ஜேர்மனியோடு இதனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம்!

தமது பிழைகள், தாம் இழைத்த கொடுமைகளை மறைத்துவிட்டு, வரலாற்றுக்கு வெள்ளைச் சாயம் அடிப்பதால் எந்த நன்மையும் விளையப்போவதில்லை. வரலாற்றின் தவறுகளை ஏற்றுக்கொண்டு, அதற்குப் பிராயச்சித்தம் தேடுவதுடன், இனி இதுபோன்ற நிலை வரக்கூடாது என்பதற்காக அந்த வரலாற்றுத்தவறைப் பற்றி, அடுத்த சந்ததிக்குக் கற்பிப்பதுதான் இந்த நாட்டுக்கும் அதன் எதிர்காலத்துக்கும் நாம் செய்யக்கூடிய பெருந்தொண்டு ஆகும்.

மறக்கமுடியாத வரலாறு இது. மனிதத்துக்கு எதிரான இந்தப் பெரும் குற்றத்துக்கு எவரேனும் பொறுப்பேற்றுக்கொண்டால்தான், மன்னிப்பது பற்றி பாதிக்கப்பட்டவர்கள் சிந்திக்கக் கூட முடியும். யாரும் பொறுப்பேற்றுக்கொள்ளாத குற்றத்துக்கு யாரை மன்னிப்பது?

மகாராஷ்டிரா

# வெள்ளம், நிலச்சரிவால் 136 க்கும் அதிகமானோர் பலி

மகாராஷ்டிரத்தில் கனமழை பெய்து வருவதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 136க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

வெள்ளம், மழை தொடர்பான விபத்துகள், நிலச்சரிவு ஆகியவற்றால் கடந்த 3 நாள்களில் 136 பேர் உயிரிழந்ததாக மாநில பேரிடர் மேலாண்மைத் துறை தெரிவித்துள்ளது. முன்னதாக, மாநில முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், 'கனமழை தொடர்பான விபத்துகளில் 76 பேர் பலியாகினர். 38 பேர் காயமடைந்தனர். மாயமான 59 பேரைத் தேடும் பணிகள் தொடர்ந்து வருகின்றன. கனமழை காரணமாக 75 விலங்குகள் பலியாகியுள்ளன.



9 மாவட்டங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த சுமார் 90,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை

# குஷ்பு நன்றி தெரிவிப்பு



தனது 'டுவிட்டர்' கணக்கை மீட்டுக் கொடுத்த, தமிழக டி.ஜி.பிக்கு, நடிகை குஷ்பு நன்றி தெரிவித்து உள்ளார்.

நடிகையும், பாரதிய ஜனதா கட்சி நிர்வாகியுமான குஷ்புவின், 'டுவிட்டர்' கணக்கு, சமீபத்தில் விஷமிகளால் முடக்கப் பட்டது. இதுகுறித்து, தமிழக டி.ஜி.பியிடம், நடிகை குஷ்பு புகார் கொடுத்து இருந்தார். புகாரைத் தொடர்ந்து, அவரது டுவிட்டர் கணக்கு மீட்கப்பட்டுள்ளது. இதுகுறித்து குஷ்பு, டுவிட்டரில், 'முடக்கப்பட்ட என் டுவிட்டர் கணக்கை மீட்டுக் கொடுத்த, டி.ஜி.பிக்கு நன்றி' எனக் குறிப்பிட்டுள்ளார். குஷ்புவின் டுவிட்டர் கணக்கை, 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பின் தொடர்கின்றனர்.

மானாமதுரை

# நடிகர் செந்தில் சுவாமி தரிசனம்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கிராமத்தில் உள்ள சித்தர் மாயாண்டி சுவாமிகள் அவதார விழாவில் திரைப்பட நகைச்சுவை நடிகர் செந்தில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் சித்தர் மாயாண்டி சுவாமிகளின் 164 வது அவதார விழா நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திரைப்பட நடிகர் செந்தில் கருப்பனேந்தல் மடத்துக்கு வந்தார். மடத்தின் நிர்வாகிகள் அவரை வரவேற்றனர். அதைத்தொடர்ந்து நடிகர் செந்தில் சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு மாயாண்டி சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு குறித்து கருப்பனேந்தல் மடத்தின் நிர்வாகிகள் விளக்கிக் கூறினர்.



தமிழகம்

## தடுப்புச் சட்டம் திருத்தியமைப்பு

# விடுதலை சிறுத்தைகள் கட்சி பாராட்டு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவைத் தமிழ்நாடு அரசாங்கம் திருத்தியமைத்துள்ளதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி பாராட்டு தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "முதலமைச்சரின் தலைமையிலான அக்குழுவில் தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழு ஆண்டுக்கு இருமுறை முதலமைச்சர் தலைமையில் கூடி ஆய்வு மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றியதற்காக முதலமைச்சருக்கு எமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நெல்லை

## இந்து மதக் கடவுள்களை விமர்சித்த

# பாதிரியார் மருத்துவமனையில்

இந்து மதக் கடவுள்களை விமர்சித்ததாகக் கைது செய்யப்பட்ட பாதிரியார் ஜோர்ஜ் பொன்னையா உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக ஜோர்ஜ் பொன்னையாவை நீதிமன்றம் 14 நாள்கள் காவலில் வைக்க உத்தரவிட்டிருந்தது. இதன்படியே நேற்று (25) அவர் பாளையம் கோட்டை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்து மதத்தையும் பாரத மாதாவையும் பிரதமர் நரேந்திர மோடியையும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவையும் அவதூறாகப் பேசியதாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மதபோதகர் ஜோர்ஜ் பொன்னையா மீது புகார் எழுந்தது.

இந்து மத ஆர்வலர்களும் பொன்னையாவின் பேச்சுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் அவரைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். பாரதிய ஜனதா கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் சனிக்கிழமை (24) ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. இழிவாகப் பேசிய விவகாரம் தொடர்பாக கிறிஸ்தவ மதபோதகர் ஜோர்ஜ் பொன்னையா மீது 7 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக எழுந்த புகாரில் தேடப்பட்டு வந்த ஜோர்ஜ் பொன்னையாவை, மதுரை, கொட்டாம்பட்டியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். இந்நிலையில் பாதிரியார் ஜோர்ஜ் பொன்னையா உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி

# காதலுக்கு உறவு முறை தடையா?

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டையை அடுத்த அஞ்செட்டி அருகே பேடரஅள்ளி பகுதியைச் சேர்ந்த 17 வயது பெண்ணிடம் அதேபகுதியைச் சேர்ந்த 21 வயது வாலிபன் உறவு முறை என்பதால் அடிக்கடி அந்தப்பெண்ணின் வீட்டுக்கு வாலிபன் சென்றுவருவது வழக்கம். குறித்த உறவு முறை வாலிபன் பிளஸ்-2இல் படித்து வருகிறார்.

இந்த நிலையில் வாலிபன் உறவினர் என்பதால் இப்பெண் நெருங்கி பழகியுள்ளார்.

உறவு முறை வாலிபன், அந்தப் பெண்ணைக் காதலிப்பதாகக் கூறியுள்ளான். அதனை ஏற்றுக் கொண்ட அந்த பெண் அவருடன் பல இடங்களில் ஊர் சுற்றியுள்ளார். அப்போது வாலிபன் அப்பெண்ணிடம் ஆசை வார்த்தைக் கூறி உல்லாசமாக இருந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணின் பெற்றோருக்குத் தகவல் தெரியவந்தது. இதனால், ஆத்திரமடைந்த பெண்ணின் பெற்றோர், உறவு முறை வாலிபனிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் அவர்கள் பெண்ணை பெற்றோரை தாக்கியுள்ளனர். இந்த சம்பவம் குறித்து பெண்ணின் தாய் தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

உறவு முறை வாலிபன் காதலித்த பெண்ணுக்கு சித்தப்பா உறவு முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,பெண்ணின் பெற்றோர் மீது தாக்குதல் நடத்திய உறவினர்கள் 5 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

மும்பை

## 'ஆபாச படங்கள் அல்ல;

# இச்சைகளைத் தூண்டும் படங்கள்தான்'

தனது கணவர் ராஜ் குந்த்ரா ஆபாச படங்களை எடுக்கவில்லை என்றும் அவர் எடுத்தது இச்சைகளை தூண்டும் வகையிலான படங்கள்தான் என்றும் பொலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டி தெரிவித்துள்ளார்.

தொழிலதிபர் ராஜ்குந்த்ரா. இவர் பொலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டியை திருமணம் செய்து கொண்டுள்ளார். இவர்களுக்கு இரு குழந்தைகள். இவர் சினிமா வாய்ப்பு தேடும் பெண்களை வைத்து ஆபாச படங்களை எடுப்பதாக புகார்கள் எழுந்தன.



மும்பை கிரைம் பிரிவு பொலிஸார் வழக்குப் பதிவு செய்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ராஜ்குந்த்ரா நள்ளிரவில் கைது செய்யப்பட்டார்.

வாய்ப்பு தேடும் பெண்களை குறி வைத்து அவர்களை நிர்வாணமாக படம் எடுத்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது குறித்து நேற்று முன் தினம் ஷில்பா ஷெட்டியிடம் மும்பை கிரைம் பிரிவினர் 6 மணி நேரத்துக்கு மேல் விசாரணை நடத்தப்பட்டது.

இதில் ஷில்பா கூறுகையில் எனது கணவர் ஆபாச படங்களை எடுக்கவில்லை. அவர் எடுத்தது காம இச்சையை தூண்டும் படங்களே. ஆபாச படங்களுக்கும் காமத்தை தூண்டும் படங்களும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. வேறுகுறித்து எனக்கு எதுவும் தெரியாது' எனத் தெரிவித்துள்ளார்.

## "தேயிலை விளைச்சல் வீழ்ச்சியடையும்"

# சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் கணிப்பு

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான தடை விதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள கடுமையான உர பற்றாக்குறைக்கு திட்டவட்டமான தீர்வு இல்லாததனால் 2021ஆம் ஆண்டின் இறுதியில், தேயிலை விளைச்சல் கடந்த ஆண்டை விட 30% வீழ்ச்சியடையும் என்றும், மார்ச் 2022க்குள் மொத்த தேயிலை உற்பத்தி அரைப்பங்காகக் குறைந்துவிடும் எனவும் இலங்கையில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தியில் 70%க்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலை தோட்டத் துறை, 500,000 தோட்ட உரிமையாளர்களைக் கொண்டுள்ளது. இது 138,900 ஹெக்டேர், 14 மாவட்டங்கள், 123 மாவட்ட செயலகங்கள் மற்றும் 3,692 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அத்துடன் இந்தத் துறையானது நாட்டிலுள்ள கிராமப் புறங்களிலுள்ள மக்களில் சுமார் 20% ஆன 5,000க்கும் மேற்பட்டவர்களின் கிராமப்புற பொருளாதாரங்களுடன் இந்தத் துறை ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கை சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கே.எல். குணரத்ன கருத்து தெரிவிக்கையில், "நாங்கள் அரசாங்கத்தின் செயற்திட்டங்களுக்கு ஆதரவளிக்க மிகவும் ஆர்வமாக உள்ளோம். ஆனால் அதை அடைவதற்கு, அனைத்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நலனுக்கும், புலத்தின் முன்னேற்றத்திற்கும் உத்தரவாதம் அளிக்கும் ஒரு நடைமுறைத் திட்டம் நமக்குத் தேவை. பல சிறு தோட்ட உரிமையாளர்கள் சுமார் இரண்டு மாதங்களாக உர தட்டுப்பாட்டை அனுபவித்து வருகின்றனர். உர இறக்குமதி தடை விதிக்கப்படுவதற்கு முன்பே மற்றவர்கள் உரங்களைப் பெறுவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். இதன் விளைவாக, 2021ஆம் ஆண்டிற்கான தேயிலைத் தோட்டங்களுக்கு உரங்கள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை" என அவர் தெரிவித்தார்.



"எங்கள் தொழில்துறையில் பலருக்கு, தேயிலையே அவர்களின் ஒரே குறிப்பிடத்தக்க வாழ்வாதாரமாகும். கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தின் விளைவாக வாழ்க்கைச் செலவு கடுமையாக உயர்ந்து வருவதால் இந்த சமூகங்கள் இப்போது கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன. குழந்தைகளுக்கு தேவையான உணவு, மருந்து மற்றும் கல்விக்கு பணம் செலுத்த இந்தத் துறையைச் சார்ந்திருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1.5 மில்லியன் மக்கள் இங்கு உள்ளனர். தற்போதைய உர பற்றாக்குறையால், சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அதற்கான தீர்வுக்காக போராட்டங்களைச் செய்கிறார்கள். இது விரைவில் தீர்க்கப்படும் என்ற உத்தரவாதத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்".

தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளதால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் வருமானம் குறைவது இலங்கையின் கிராமப்புற பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

"இந்தத் துறையில் போக்குவரத்து முதல் தேயிலை வாங்குபவர்கள் வரை பல இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட துறைகள் உள்ளன. தேயிலைத் துறையின் வீழ்ச்சி இந்த அனைத்து துறைகளையும் பாதிக்கும். இந்த நிலைமையை நிர்வகிக்க முறையான அமைப்பு அல்லது திட்டம் இல்லா விடின், கிராமப்புற பொருளாதாரம் நிச்சயமாக வீழ்ச்சியடையும்" என குணரத்ன சுட்டிக்காட்டினார்.

கனிம உரங்களை இறக்குமதி செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் முழுமையான தடை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் உரங்கள் பற்றாக்குறை இருப்பதாகவும், தற்போதுள்ள உர இருப்புக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. நாட்டின் ஒட்டுமொத்த விவசாய மற்றும் பெருந் தோட்ட பொருளாதாரத்தை முழுமையான கனிம விவசாயத்துடன் கூடிய பொருளாதாரமாக மாற்றுவதற்கான முடிவின் ஒரு பகுதியாக இந்த தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய எதிர்கால எண்ணத்தை எவ்வாறு அடைய முடியும் என்பதற்கான கோட்பாடு இல்லாதபோது, உணவுப் பாதுகாப்பு பிரச்சினை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வருகின்றன, மேலும் ஏற்றுமதி பயிர்களின் அளவு வீழ்ச்சியடைந்து வருவது ஏற்கனவே ஒரு பெரிய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

## SLT–MOBITEL அத்தியாவசிய

# மருத்துவ சாதனங்கள் கையளிப்பு





SLT-MOBITEL, குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு Multi Para Monitor ஒன்றை அன்பளிப்பு செய்திருந்தது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு பங்களிப்பு வழங்கும் வகையில் இந்த நன்கொடையை மேற்கொண்டிருந்தது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள இரண்டாவது பாரிய வைத்தியசாலையாக இது திகழ்வதுடன், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க இந்த சாதனம் பயன்படுத்தப்படும்.

SLT-MOBITEL இன் பிராந்திய தலைமை அதிகாரி ரன்மல் பொன்சேகா மற்றும் SLT-MOBITEL இன் பிராந்திய டெலிகொம் முகாமையாளர் சானக உதயங்க ஆகியோர் இந்த சாதனத்தை குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர். பிரபாத் வீரவத்தவிடம் கையளித்திருந்தார்.

இந்நிகழ்வில் SLT-MOBITEL இன் மாவட்ட முகாமையாளர் நிரோஷ கருணாரட்ன, திட்டமிடல் மருத்துவ அதிகாரி வைத்தியர். மதுஷ சந்துமார மற்றும் வைத்தியசாலையின் மேற்பார்வைமாது எம். எம்.ஏ.மாரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கொவிட்–19 நோயாளர்களுக்கான

# இடைநிலை பராமரிப்பு மையம் திறப்பு

450 படுக்கைகளைக் கொண்ட ஒரு இடைநிலை பராமரிப்பு மையத்தை பொல்கஹவெலையில் MAS Intimates திறந்துள்ளது. இந்த மையமானது வடமேல் பிராந்தியத்தில் வைரஸ் வேகமாக பரவுவதால் அப்பிராந்தியம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில், அந்த மாகாணத்தில் உள்ள ஊழியர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பொது மக்களின் நலன் மற்றும் சிகிச்சைக்காக இலங்கை இராணுவத்தின் உதவியுடன் இது அமைக்கப்பட்டுள்ளது.



இந்த இடைநிலை பராமரிப்பு மையம், ரூ. 48 மில்லியன் தொகைக்கும் மேற்பட்ட செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், வடமேல் மாகாண ஆளுநரான கௌரவ ராஜா கொலுரே அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. MAS Intimates நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ரஜீவ் தர்மேந்திரா, உற்பத்தி மற்றும் தொழில்பாடுகளுக்கான பணிப்பாளரான ருவான் கேரகல மற்றும் MAS Intimates இன் உற்பத்தித்துறை பணிப்பாளரான ரொஹான் தளுகல ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வடமேல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரான வைத்தியர் எம்.கே. சம்பத் இந்திக குமார அவர்களின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ள இந்த இடைநிலை பராமரிப்பு மையமானது, பாரதூரமான கொவிட்-19 நோயாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப விசேட வசதிகளைக் கொண்டுள்ளது. இந்த மையம் உயர் மட்ட துணைப் பிரிவு மற்றும் விசேட வசதிகளை வழங்குவதுடன், அதிக அளவில் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட 20 நோயாளர்களுக்கு இடமளிக்கும். எந்தவொரு நோயாளியின் ஒட்சிசன் மட்டங்களையும், சிசிடிவி கண்காணிப்புக் கமெராக்கள் மூலமாக நோயாளர்களை அவதானிக்கவும் தேவையான திறனுடன், மருத்துவர்களின் பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தை மனதில் கொண்டு இந்த மையம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

பொல்கஹவலை பிராந்திய வைத்தியசாலை இந்த பராமரிப்பு மையத்தில் நோயாளர்களுக்கு தேவையான நோயாளர் பராமரிப்பு சேவைகளை வழங்குவதுடன், வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியன இதன் முக்கிய பங்குதாரர்களாக செயல்படுகின்றன.

இந்த முயற்சியின் மூலம், தனது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் அது செயல்படும் சமூகங்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கும் MAS Intimates, கண்டி மற்றும் குருணாகல் மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சூழலை தோற்றுவிக்கும் எண்ணத்துடன் செயல்பட்டு வருகின்றது.

LkNewspapers

ஈராக்

'ஈராக்குக்கு
# அமெரிக்க படைகள் தேவையில்லை'

ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுவுடன் சண்டையிடுவதற்கு ஐக்கிய அமெரிக்க சண்டைப் படைகள் இனி ஈராக்குக்குத் தேவையில்லை என ஈராக்கின் பிரதமர் முஸ்தஃபா அல்-கட்ஹிமி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உத்தியோகபூர்வமாக ஐ. அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படும் உத்தியோகபூர்வ காலப் பகுதியானது இவ்வார ஐ. அமெரிக்க அதிகாரிகளுடனான பிரதமர் அல்-கட்ஹிமியின் பேச்சுக்களிலேயே தீர்மானிக்கப்படும் எனத் தெரிகிறது.

த அஷோஷியேட் பிரஸ் செய்தி முகவரகத்துடனான நேர்காணல் ஒன்றிலேயே குறித்த கருத்தை பிரதமர் அல்-கட்ஹிமி வெளிப்படுத்தியுள்ளார்.



இதேவேளை, இனியும் ஐ. அமெரிக்க பயிற்சியை மற்றும் இராணுவப் புலனாய்வுச் சேகரிப்பை ஈராக் கோரும் என பிரதமர் அல்-கட்ஹிமி தெரிவித்துள்ளார்.

ஈராக்



ஐ. அமெரிக்க படைகள் மீது
## ட்ரோன் தாக்குதல்

வட ஈராக்கில் ஐக்கிய அமெரிக்கப் படைகளைக் கொண்டுள்ள இராணுவத் தளம் ஒன்று றொக்கெட் ஒன்றால் தாக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் அரைச் சுயாட்சி குர்திஷ் பிராந்தியத்தின் தலைநகரான இர்பிலுக்கு 70 கிலோ மீற்றர் வடகிழக்காகவுள்ள அல்-ஹைருக்கு அருகேயுள்ள தளமொன்றையே தாக்குதல் இலக்கு வைத்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், ஆளில்லாத ட்ரோன், குர்திஷ்தானிலுள்ள கூட்டணியின் தளம் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் தாக்கியதாக அறிக்கை ஒன்றில் கூட்டணியின் பேச்சாளர் கேணல் வெய்ன் மரோட்டோ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். தவிர, தாக்குதலால் எதுவித உயிரிழப்புகளோ, சேதமோ ஏற்படவில்லை என மரோட்டோ கூறியுள்ளார்.




## நிறம்மாறிய முழுநிலா

ஐக்கிய அமெரிக்காவின் வட மேற்கு, தென் மேற்கு கனடாவில் எரியும் காட்டுத்தீ, இம்மாத முழுநிலவில் செம்மஞ்சள் நிழலைக் கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் படரச் செய்திருந்தது.

ஐ. அமெரிக்கா

கொரோனா தடுப்பு மருந்தை
## கேலி செய்தவர் கொரோனாவால் மரணம்




கொரோனா தடுப்புமருந்துகளை சமூக வலைத்தளங்களில் கேலி செய்த ஐக்கிய அமெரிக்காவின் கலிஃபோர்னியாவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். கொரோனாவுடன் ஒரு மாதம் போராடிய பின்னரே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். ஹில்சொங்க் மெகாசேர்ச் உறுப்பினரான குறித்த நபர், தனது மத நம்பிக்கை தன்னைப் பாதுகாக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஐ. அமெரிக்க நோய் நிபுணரான அந்தோனி பௌசியை விட பைபிளை நம்புவதாக குறித்த நபர் தெரிவித்திருந்தார்.

பலஸ்தீனம்

இஸ்ரேலிய இராணுவத்தால்
## 'சுடப்பட்ட பலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர் உயிரிழப்பு'

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் சட்ட ரீதியற்ற இஸ்ரேலியக் குடியிருப்புகள் தொடர்பான ஆர்ப்பாட்டம் ஒன்றில் இஸ்ரேலியப் படைவீரர்களால் சுடப்பட்டதையடுத்து பலஸ்தீன பதின்ம வயதுக்காரர் ஒருவர் உயிரிழந்ததாக பலஸ்தீன அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த மோதல்களில் 320 பலஸ்தீனர்கள் காயமடைந்ததாக செம்பிறைச் சங்கம் தெரிவித்துள்ளது.



உகண்டா

## கொரோனாவுக்குள் எம்.பிகளுக்கு புதிய கார்

புதிய கார்களை வாங்குவதற்காக 30 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உகண்டா கையளித்துள்ளது.

இந்நிலையில், வறிய நாடான உகண்டாவில் கொரோனா பரவல் தாண்டவமாடுகின்ற நிலையில் இது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனாத் தொற்றுகள் அதிகரிக்கையில், 529 பாராளுமன்ற உறுப்பினர்களும் 56,500 ஐக்கிய அமெரிக்க டொலரை புதிய வாகனங்களைப் பெறுவதற்காக பெறவுள்ளனர்.

ஏற்கெனவே மாதாந்த வருமானமாக 8,000 ஐக்கிய அமெரிக்க டொலரை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.




தொழிலாளி ஒருவரின் சராசரி மாத வருமானம் 28 ஐக்கிய அமெரிக்க டொலர் என்பதுடன், ஆசிரியர் ஒருவரின் ஊதியமானது 75 ஐக்கிய அமெரிக்க டொலர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018ஆம் ஆண்டு இதே போன்ற நகர்வு காரணமாக ஆர்ப்பாட்டங்கள் வெடித்து, பாராளுமன்றத்துக்குள் செயற்பாட்டாளர்கள் செல்ல முன்னர் கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டோக்கியோ 2020: ஜிம்னாஸ்டிக்கில்
# மில்கா அவுட்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் ஜிம்னாஸ்டிக்கில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற இலங்கையின் மில்கா ஜெஹானி தவறியுள்ளார்.



வோல்டில் 13.366, அன்ஈவின் பாரில் 10.866, பலன்ஸ் பீமில் 11.266, புளோரில் 10.300 என்றவாறு மொத்தமாக 45.798 புள்ளிகளைப் பெற்ற மில்கா, நான்காவது தகுதிகாண் போட்டிகள் நேற்று பிற்பகலில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது 46ஆவது இடத்தில் காணப்பட்டிருந்தார்.

அந்தவகையில், இறுதிப் போட்டிக்கு முதல் 24 வீராங்கனைகளே தகுதி பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று முன்தினம் தனிநபர் பூப்பந்தாட்டத்தின் ஆண்களுக்கான குழு எஃப் போட்டியொன்றில் தாய்வானின் வாங் ஸு-வெய்யிடம் இலங்கையின் நிலுக கருணாரத்ன தோல்வியடைந்திருந்தார்.

இந்நிலையில், பெண்களுக்கான 100 மீற்றர் பட்டர்பிளை அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற இலங்கையின் அனிகா கபூர் தவறியதுடன், பெண்களுக்கான 10 மீற்றர் எயார் றைபிள் துப்பாக்கி சுடும் போட்டியின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற இலங்கையின் டெஹானி எகொடவெல தவறியிருந்தார்.

இதேவேளை, உலகின் முதல்நிலை டென்னிஸ் வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் அஷ்லெய் பார்ட்டி, அதிர்ச்சிகரமாக முதலாவது சுற்றுடனேயே தனிநபர் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார். 4-6, 3-6 என்ற நேர் செட்களில் ஸ்பெய்னின் சரா சொரிபெஸ்ஸிடம் பார்ட்டி தோல்வியடைந்திருந்தார்.

பதக்கப் பட்டியலில், நான்கு தங்கங்கள், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களுடன் முதலாவதாக சீனா காணப்படுகின்றது. மூன்று தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கத்துடன் இரண்டாமிடத்தில் ஜப்பான் காணப்படுவதுடன், இரண்டு தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், நான்கு வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஐக்கிய அமெரிக்கா காணப்படுகின்றது.



இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டி; அயர்லாந்தை
## வெள்ளையடித்தது தென்னாபிரிக்கா

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில் அயர்லாந்தை தென்னாபிரிக்கா வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பெல்பாஸ்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என அயர்லாந்தை தென்னாபிரிக்கா வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 189/2 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தெம்பா பவுமா 72 (51), றீஸா ஹென்ட்றிக்ஸ் 69 (48), டேவிட் மில்லர் ஆ.இ 36 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: சிமி சிங் 1/27 (4))

அயர்லாந்து: 140/9 ( 20 ஓவ. ) (பந்துவீச்சு: வியான் முல்டர் 2/10 (2), ஜோர்ஜ் லின்டி 2/21 (4), லிஸாட் வில்லியம்ஸ் 2/30 (4), அன்டிலி பெக்லுவாயோ 1/15 (2), பிஜோன் போர்டின் 0/25 (4))

போட்டியின் நாயகன்: தெம்பா பவுமா

தொடரின் நாயகன்: டேவிட் மில்லர்

இரண்டாவது ODI–இல்
## மேற்கிந்திய தீவுகள் வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் (ODI) மேற்கிந்தியத் தீவுகள் வென்றுள்ளது.



மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் இன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியிலேயே நான்கு விக்கெட்டுகளால் மேற்கிந்தியத் தீவுகள் வென்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 187/10 (47.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெஸ் அகர் 41, அடம் ஸாம்பா 36 (62), மத்தியூ வேட் 36 (68) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 3/30, அல்ஸாரி ஜோசப் 3/39, ஷெல்டன் கோட்ரல் 2/29, ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 1/32, ஜேஸன் ஹோல்டர் 1/41)

மேற்கிந்தியத் தீவுகள்: 191/6 (38 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் ஆ.இ 59 (75), ஜேஸன் ஹோல்டர் 52 (69), ஷே ஹோப் 38 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/26, அடம் ஸாம்பா 2/43, அஸ்டன் டேணர் 1/37)

போட்டியின் நாயகன்: நிக்கலஸ் பூரான்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது பார்படோஸில் நாளை நள்ளிரவு 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

## புது ஒப்பந்தத்தில் சொல்க்ஜர் ஒப்பம்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முகாமையாளரான ஒலே குணார் சொல்க்ஜர் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக யுனைட்டெட் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரையில் யுனைட்டெட்டின் முகாமையாளராக சொல்க்ஜர் தொடரவுள்ளார்.

முன்னதாக அடுத்தாண்டுடன் யுனைட்டெட்டுடனான சொல்க்ஜருடன் ஒப்பந்தமானது



முடிவடைவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மூன்றாண்டு ஒப்பந்தமொன்றில் சொல்க்ஜர் கைச்சாத்திட்டுள்ளார். அதில் இன்னொரு ஆண்டுத் தெரிவொன்றும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018ஆம் ஆண்டு யுனைட்டெட்டின் முகாமையாளராக சொல்க்ஜர் பதவியேற்றிருந்தார்.

ODI – ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானும்
## ஹம்பாந்தோட்டையில் மோதவுள்ளன

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் (ODI) தொடரானது ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.



முதலில் ஐக்கிய அரபு அமீரகத்திலேயே இத்தொடர் நடைபெறுவதாக இருந்தது.

இந்நிலையில், இரண்டாவது பகுதி இந்தியன் பிறீமியர் லீக்கானது இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாவதாக இருக்கின்ற நிலையிலேயே அங்கு போட்டிகளை நடத்த முடியாமலுள்ளது.

அந்தவகையில், இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது இரு தரப்புத் தொடரானது இவ்வாண்டு செப்டெம்பர் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 26 ஜூலை 2021, இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.